யாழ்ப்பாணம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 மார்கழி 13 ராபி ஆகி 15 இதழ் 321
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 28-12-1985

## 42 பேர் பூஸா முகாம் அனுப்பி வைக்கப்பட்டனர்

[அக்கரைப்பற்று]

அக்கரைப்பற்றுப் பகுதியில் இடம்பெற்ற சோதனையின் போது ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டவர்களில் 42 பேர் காலி பூசாமுகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மிகுதியானவர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

## கைதான இளைஞர்கள்; 10மாதமாகியும் தகவல்இல்லை

[யாழ்ப்பாணம்]

மன்னார்க்கடலில் வைத்து கடந்த பெப்ரவரி 28ல் கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்களின் நிலைகுறித்து அவர்களின் பெற்றோர் யாழ். அரசாங்க அதிபரிடம் முறையிட்டுள்ளனர்.

மகேந்திரன் விஜயன் (17 வயது), ஐயம்பிள்ளை நகுலேஸ்வரன் (17 வயது) கணபதிப்பிள்ளை நகுலேஸ்வரன் (20 வயது) ஆகிய மூவருமே பத்து

(5-ம் பக்கம் பார்க்க)

### விளையாட்டரங்கு, நூலகம், பூங்கா, திறந்தவெளி..... இடம்மாறுகிறது!

# சங்கிலி மன்னன் ராஜதானிக்கு அருகில் மாநகரசபை புதிய செயலகம்!

(கா. யோகநாதன்)

"யாழ்ப்பாணம் கோட்டைப்பகுதியில், யாழ். மாநகரசபையின் பொறுப்பிலுள்ள கட்டடங்கள், அரங்குகள், பூங்கா ஆகியவை பாதுகாப்புக் காரணமாக நகரின் வேறு இடங்களில் அமைக்கப்படும், சங்கிலி மன்னனின் ராஜதானிக்குச் சமீபத்தில் சபையின் புதிய செயலகம் அமைக்கப்படும்".

யாழ் மாநகர சபையின் 1986ம் ஆண்டு வரவு.செலவுத் திட்டக் கூட்டத்தில் நேற்றுக் காலை உரை நிகழ்த்திய யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வீ. சே சிவஞானம் மேற்கண்ட தகவலைத்தெரிவித்தார்.

நல்லூர் இந்து விடுதியில் நடந்த இந்தக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"புதிய செயலகத்தின் மாதிரிப்படத்தை இளம் கட்டடக் கலைஞர்கள் குழுவொன்று தயாரித்துள்ளது. இம்மாதிரி வரைபடம், மக்களின் பார்வைக்காகவும், அவர்கள் அபிப்பிராயம் தெரிவிப்பதற்காகவும் 86ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி நல்லூர் இந்து விடுதியில் வைக்கப்படும்.

"சபை அலுவலகங்களுக்கு மாதம் 15,000 ரூபா வாடகை செலுத்தப்படுவதாலும், மக்கள் அங்குமிங்குமாக அலைய வேண்டியிருப்பதாலும் சகல அலுவலகங்களையும் உள்ளடக்கியதாக புதிய செயலகம் அமைக்கப்படுகிறது. புதிய செயலகத்திற்கென வரவு-செலவுத்திட்டத்தில் பதினொரு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது".

### முக்கிய விபரங்கள்

ஆணையாளரின் உரையில் தெரிவிக்கப்பட்ட முக்கிய விபரங்கள்:-

★ சிலவருடகாலம் பாவிக்கப்படாதிருந்த துரையப்பா விளையாட்டரங்கு தற்போதுள்ள சூழ்நிலையில் இனிமேலும் பாவிக்க முடியாதுள்ளது. இதற்குப்பதிலாக பாஷையூரிலுள்ள விளையாட்டரங்கை தரமுயர்த்த 92,000ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கல்லூரி மாணவர்களும் கழகங்களும் இதனை பயன்படுத்தலாம்.

★ "யாழ்.பொதுசன நூலகத்திற்கு யாழ். மாநகரசபை ஆணையாளர்கூட இன்றுசெல்ல முடியாதநிலை உள்ளது. இதற்குப்பதிலாக கிளை நூலகங்கள் அமைக்கப்படும். நல்லூரில் மற்றொரு கிளை நூலகமும், குருநகர், முஸ்லிம்பகுதியிலும்கிளை நூலகம் ஆரம்பிக்கப்படும்,

நகரமண்டபத்தை முற்றாக இடித்துவிடுமாறு மேலிடம் பணித்துள்ளது. இதன் கற்களை

(5ம் பக்கம் பார்க்க)

### கிளிநொச்சியில் தொடரும் பதற்றநிலை

# மக்கள் வெளியேறுகிறார்கள்

## மலையக மக்கள் மத்தியிலும் பெரும் அச்சம்

[நமது கிளிநொச்சி நிருபர்]

கிளிநொச்சி மாவட்டத்தில் இரவு பகலாக நடைபெற்று வரும் தேடுதல் ரோந்து நடவடிக்கைகளைத் தொடர்ந்து பொதுமக்கள் மத்தியில்பெரும் பதற்றமும் அச்சமும் ஏற்பட ஆரம்பித்துள்ளது.

இதனையடுத்து பெருவாரியான பொதுமக்கள் மாவட்டத்தை விட்டு வெளியேற ஆரம்பித்துள்ளனர்.

காலத்துக்குக்காலம் ஏற்பட்டுவரும் இனக்கலவரங்களை தொடர்ந்து இடம்பெயர்ந்த மலையக மக்கள் வாழும் பாரதிபுரம் போன்ற கிராமங்களிலும் நடவடிக்கைகள் துரிதம் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அச்சம்காரணமாக இங்கு வாழும் மலையகமக்களும் மலையகத்திற்கும் கொழும்பிற்கும் திரும்பிச்செல்ல ஆரம்பித்துள்ளனர்,

இதுதொடர்பாக அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் இ. தொ.கா. பொதுச்செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி

(5-ம் பக்கம் பார்க்க)

## 'அமிர்' மே. ஜேர்மனி பயணம்

(லண்டன்)

தமிழர் விடுதலை கூட்டணி செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு மேற்கு ஜேர்மனி பயணமானார்.

திரு அமிர்தலிங்கம் லண்டனில் இருக்கும் போது பல்வேறு தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து இலங்கைத் தமிழர் நிலை குறித்து விரிவாக எடுத்துரைத்தார்

## "ஆசிரியர் இடமாற்றங்களை உடன் வழங்குங்கள்!"

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்களுக்கான வருட இறுதி இடமாற்றங்களை பின்போடுவதுஎன்ற கல்வி அமைச்சின் தீர்மானத்தை உடன் வாபஸ்பெற்று, வருட இறுதி இடமாற்றங்களை ஆசிரியர்களுக்குவழங்குமாறு கோரி கல்வி அமைச்சுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

வருடஇறுதி இடமாற்றங்களுக்கு விண்ணப்பிக்க விரும்புவோரை விண்ணப்பிக்குமாறு கடந்த ஆகஸ்ட்மாதம் கல்விச் சேவைக்குழு அறிவித்திருந்தது. இதற்கமைய பலர் விண்ணப்பித்திருந்தார்கள். அவர்களது விண்ணப்பங்களும் தகுதிவாய்ந்தனவாகக் காணப்பட்டன.

ஆனால் தற்போது கல்வி அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டுள்ள இத்திடீர் முடிவு ஆசிரியர்களை மிகுந்த துன்பத்

(5ம் பக்கம் பார்க்க)

### சிறப்பாக நடந்தேறிய மணிவாசகர் விழா

[யாழ்ப்பாணம்]

"காரைநகர் ஈழத்துச் சிதம்பரத் திருத்தலத்தில் மணிவாசகர் விழா சிறப்பாக மூன்று தினங்கள் நடைபெற்றது.

மணிவாசகர் சபையினர் திருவாதிரை 'மலர்' ஒன்றினையும் வெளியிட்டுள்ளனர்.

தேர் அன்று விடிவு நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் ஒன்று நாதஸ்வர தவில் கலைஞர்

(5ம் பக்கம் பார்க்க)

### இந்திய காங்கிரஸ் மகாசபை

## நூற்றாண்டுவிழா ஆரம்பம்

(பம்பாய்)

இந்திய காங்கிரஸ்கட்சியின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் நேற்று பம்பாயில் கோலாகலமாக ஆரம்பமாகின.

வரலாற்றுப் புகழ்மிக்க ஆகஸ்ட்புரட்சி மைதானத்தில் கட்சித்தலைவர் திரு. ராஜீவ் காந்தி காங்கிரஸ் கொடியை ஏற்றிவைத்ததுடன் இவ்வைபவம் ஆரம்பமானது.

இந்த மைதானத்தில்தான் காங்கிரஸ்கட்சியின் முதல்கூட்டம், நூறாண்டுகளுக்கு முன்னர் நடந்தது. மகாத்மாகாந்தியின் 'வெள்ளையனே வெளியேறு' கோஷம் முதன்முதலில் முன்வைக்கப்பட்ட இடமும் இதுதான்.

இந்த வைபவத்தை ஆரம்பித்துவைத்ததின் பின்னர் பத்திரிகையாளரிடம் பிரதமர்

(5ம் பக்கம் பார்க்க)

### "ராஜீவ் மறுபரிசீலனை செய்யவேண்டும்"

# 'தொண்டா சமரசத் திட்டம்:

## ஜனாதிபதி கொள்கைஅளவில் ஏற்றார்

(சென்னை)

இந்தியாவில் அகதிகளாக தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் மக்கள் சகலபாதுகாப்புகளுடனும் நாடு திரும்பும் வரை இந்தியக் குடியுரிமை பெற்றுள்ள மலையகத் தமிழ் மக்களை இந்தியா ஏற்கபோவதில்லை', என்று இந்தியப் பிரதமர் விடுத்துள்ள கருத்தினை மறுபரிசீலனை செய்யுமாறு தாம் கேட்டுக்கொள்ளப் போவதாக கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் கூறியுள்ளார்.

பம்பாயில் நடைபெறும் அகில இந்திய காங்கிரஸ் நூற்றாண்டு விழாக்களில் கலந்து கொள்வதற்காக இந்தியா சென்றுள்ள அமைச்சர் எஸ். தொண்டமான் நேற்று மதுரையில் நிருபர்கள் மத்தியில் இலங்கைப் பிரச்னை சம்பந்தமாக கருத்து வெளியிடுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

(5-ம் பக்கம் பார்க்க)

## அரசடிச்சந்தியில் துப்பாக்கி வேட்டுகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அரசடிச்சந்தியில் நேற்று மாலை ஒரே துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணமிருந்தது!

நேற்றுக் காலை சில இளைஞர்கள் அரசடிச் சந்தியில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்த போது ஆயுதப்படையினர் அங்கு வந்ததாகவும் இந்த இடத்துக்கு மாலையில் சில இளைஞர்கள் வந்தபோது ஆயுதப்படையினரை எதிர்கொண்

(5-ம் பக்கம் பார்க்க)

# விளம்பரம்

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் (றெயில்வே கடவைக்கு அண்மையில்) நான்கு அறைகள், இரு சமையல் அறைகள். கார் கருச், நீர் மின்சார வசதிகளுடன் கூடிய நாற்சார் வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 2655, C/o ஈழநாடு அல்லது தொலைபேசி இல: 22127.
(2655)

## தேவை

பிரபல பார்மசிக்கு நல்ல அனுபவம் உள்ள பெண் விற்பனையாளர் தேவை. நல்ல அனுபவம் இருந்தால் மட்டும் உடன் விண்ணப்பிக்கவும். யாழ்நகருக்குள் இருப்பின் விரும்பத்தக்கது. C/o ஈழநாடு, விளம்பர இல. 2640, யாழ்ப்பாணம். (2640)

## கல்வி

VISPA ENGINEERING AID HALL (ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கியின் அருகேயுள்ள ஒழுங்கையினுள்) 2, 3, 6 மாத வகுப்புகள். வெளிநாடுகளில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். Wiring, Welding, ரேடியோ, ரி. வி., மோட்டார் மெக்கானிசம். ஆரம்பம்: 28-12-85 நத்தாரை முன்னிட்டு முதலில் சேருபவருக்கு கட்டணத்தில் சலுகை வழங்கப்படும். 2596

## மணப்பந்தல்

வியாபாரத் தொழிலில் ஈடுபட்டுள்ள 36 வயதுடைய மணமகனுக்கு படித்த அழகுள்ள மணப்பெண் தேவை. சீதன விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். திருமண தரகர்களும் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல. 2643 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2643

### இலங்கை மின்சார சபையின் முக்கிய அறிவித்தல்
### மின்தடை

85- 12- 29 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முக்கிய பராமரிப்பு வேலை காரணமாக காலை 8-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணிவரை யாழ். நகரிலுள்ள எல்லா இடங்களுக்கும் மின் விநியோகத்தடை ஏற்படும் என சகல மின் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

இம் மின்தடையால் பாதிப்புறும் சகல மின்நுகர்வோரிடமிருந்து அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சாரசபை தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இப்படிக்கு
**மின் பொறியியலாளர்,**
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சாரசபை,
சுன்னாகம்.
(2646)

## விற்பனைக்கு

அல்சேசன் நாய்க்குட்டிகள் (Pure bred), இயர்போன் (Ear Phone), குளிர்சாதனப் பெட்டி, மின் விசிறிகள், கமராக்கள், கசற் றேடியோக்கள், கம்பளங்கள், வெளிநாட்டுக் கிளாஸ் வகைகள், தட்டச்சு இயந்திரம், தையல் மெஷின், வெளிநாட்டுத் துணி வகைகள், வீட்டுத் தளபாடங்கள் இன்னும் பலதரப்பட்ட பொருள்கள் விற்பனைக்குண்டு. சி. பத்மநாதன், C/o திரு. அம்பலவாணர், திருநெல்வேலி வடக்கு. (திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் இடையில் உள்ளது)
(2637)

## வைத்தியம்

மூலவியாதிகள், வாதவியாதிகள், பீனிசம், எக்ஸிமா போன்ற சருமவியாதிகள், தொய்வு, கண்ரோகங்கள், நரம்புத்தளர்ச்சி, மாதவிடாய் கால உபத்திரவங்கள், குழந்தைப்பேறின்மை, குழந்தைகள் சம்பந்தமானவியாதிகளுக்கும், நீரிழிவு ரோகத்திற்கும், சித்த ஆயுர்வேத வைத்திய முறைப்படி சிகிச்சை பெறலாம். டாக்டர் மங்களாம்பிகை D. A. M. மங்களபதி வைத்தியசாலை, [பண்டாரக்குளம் பிள்ளையார் கோவிலடி] 41/5, அரசவீதி, நல்லூர். 2530

### யாழ்ப்பாண அக்கடமி
### க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1986
### துரிதமீட்டல் வகுப்புகள்

86ம் ஆண்டுப் பரீட்சைக்கான துரித மீட்டல் வகுப்புகள் 6-1-86ல் ஆரம்பமாகின்றன. பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் விபரங்கள் தேவையாயின் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

**அதிபர்.**
தொலைபேசி எண்: 22617.
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(2465)

## ஆசிரியப் பெருந்தகை

நாற்பது ஆண்டுகளாக ஈழத்துக் கல்வியுலகில் அளப்பரிய சேவையாற்றி கடந்த ஆண்டு டிசம்பர் 28-ல் அமரரான திருமதி அக்னஸ் சூசைப்பிள்ளை மறைந்து இன்று வருடமொன்று பூர்த்தியாகிறது.

நீர்கொழும்பு, மட்டக்களப்பு, திருக்கோணமலை, யாழ்ப்பாணம்ஆகியஇடங்களில்இவர் ஆற்றிய அரும்பணி நன்றியோடு நினைவு கூரக்கூடியதே! யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தில் அக்கினஸ் டேவிட் என்ற நாமத்தோடு 1932-இல் பயிற்றப்பட்ட ஆசிரியையாக கல்விப் பணியினை ஆரம்பித்த இவர் அமரராகும்வரை அறிவின் சிகரமாய் ஆசிரிய ஜோதியாய் இலங்கினார். திருகோணமலையில் தலைமைஆசிரியராக இருந்த திரு. எஸ். பி. சூசைப்பிள்ளையின் மனைவியாக மாறியபின்னர் இவரது குடும்பமே தமிழ்ப் பணியிலும் ஆசிரியப்பணியிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டது.

-அ. அமிர்தராஜ்-

## 'உங்கள் சேவைக்கு கரங்கொடுங்கள்'

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் இரண்டாவது பெரிய வைத்திய சாலை என்று கருதப்படும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அதன் அபிவிருத்திப் பணிக்கென மக்களின் உதவியை நாடியுள்ளது.

இந்த ஆதார வைத்திய சாலையின் குறைபாடுகளைப் போக்கி, மேலும் சேவையாற்றுமுகமாக தம்மால் இயன்ற உதவிகளை வழங்க முன்வருமாறு நலன் விரும்பிகளுக்கு, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைவேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

### பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

நம்பிக்கைச் சட்டத்தின் 42(2)ம் பிரிவின் கீழ் செய்யப்படும் விண்ணப்பவிடயத்தில்,
குமாரசாமி ஸ்ரீசண்முகதேவ், அல்வாய் தெற்கு. மாலைசந்தை (மாலிசந்தை) ஸ்ரீ வரதராஜா விநாயகர் கோவில் தர்மகர்த்தா என்றவகையில்
மனுதார்.

வழக்கு இல: TR/ 136
எதிர்
(1) கணபதிப்பிள்ளை கணேசு,
(2) கணபதிப்பிள்ளை நடராசா,
(3) விஸ்வலிங்கம் ஸ்ரீபாலகணேசமூர்த்தி, மூவரும் அல்வாய் தெற்கு.
(4) ம. வேலுப்பிள்ளை கைம்பெண்அன்னம்மா, திருவாளி, இமையாணன், உடுப்பிட்டி.
(5) கந்தசாமி தாமோதரம் பிள்ளை.
(6) மயில்வாகனம் ஸ்ரீஸ்கந்தராஜா, இருவரும் புலோலிதெற்கு.
எதிர்வாதிகள்.

அல்வாய் தெற்கு மாலை சந்தை (மாலி சந்தை) ஸ்ரீ வரதராஜ விநாயகர் கோவிலின் வகைக்காக உரியதும் பின்னுற்காணும் அட்டவணையில் நன்கு விபரிக்கப்பட்டுள்ளதுமான ''இணவொல்லை நி. பர. 8 குளி 12 25/32'' எனும் ஆதனத்தை விற்பனை செய்து அதிலிருந்து கிடைக்கும் பணத்தில் புதிய சித்திரத் தேர் செய்வதற்காக மேற்குறித்த மனுதார் குறித்தவிற்பனைக்கு இம்மன்றின் அனுமதியைக்கோரி விண்ணப்பித்துள்ளாராகையால், குறித்த இவ் விண்ணப்பத்திற்கு மாறாக ஏதும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை இம்மன்றில் 1986ம் ஆண்டு தை மாதம் 24ம் திகதி காலை 9 மணிக்கு தோற்றி தெரிவிக்கலாமென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### மேற்குறித்த ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று அல்வாய் இமையாணன் குறிச்சியிறை ''இணவொல்லை நி. பர. 8 குளி 12 25/32'' இதற்கு எல்லை கிழக்கு சிதம்பரம் அம்பலவாணசுவாமி கோவிலுக்குரிய ஆதனம் 'வடக்கு 386ம் இலக்கப்படத்தில் 4ம்துண்டு மேற்கு 386ம் இலக்கப் படத்தில் 2ம் துண்டு தெற்கு ஒழுங்கையும் வீதியும் அருணசலம் சின்னையாவுக்குரிய ஆதனமும் இதடங்கல் முழுவதும் 386ம் இலக்கப்படத்தில் 4ம் துண்டான பாதை நிலத்தில் இதற்குரிய பங்கும்.

1985 மார்கழி 20ம் திகதி.

**மு. க. முத்துக்குமார்,**
(ஒப்பம்)
மனுதாரின் சட்டத்தரணி
(2608)

## "கலாசாரத்தைச் சிதைக்கும் காட்சிகள் தவிர்க்கப்படவேண்டும்"

[நமது கிளிநொச்சி நிருபர்]
ஈழத்துத் தமிழ் நாடகத் துறை வளர்ச்சிக்குப் பல ஆண்டுகளாகப் பாடு பட்டு வரும் வரணியூரானின் கலைத்துறைப் பணி பாராட்டிற்குரியதும் பெருமைப்பட வேண்டியதுமாகும் என்று வரணியூரானின் தொலைக்காட்சி நாடகமான 'நம்பிக்கை' விமர்சன அரங்கில் உரையாற்றுகையில் பிரபல சட்டத்தரணியும் இலக்கிய விமர்சகருமான ரி. ஸ்ரீஸ்கந்தராஜா குறிப்பிட்டார்.

கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாசாலை அரங்கில் 'ஈழநாடு' வாசகர் வட்டத் தலைவரும் ஆசிரியருமான நா. சோதிநாதன் தலைமையில் பிரஸ்தாப விமர்சன அரங்கு இடம்பெற்றது.

கிளிநொச்சிக் கலாசாரப் பேரவையினர் இவ் வரங்கினை ஒழுங்கு செய்திருந்தனர்.

எழுத்தாளரும்கிராமசேவை அலுவலருமான திரு. எஸ். தனபாலசிங்கம் உரையாற்றுகையில்,

தமிழ் நாடக உலகிற்கும் கலைத்துறைக்கும்வரணியூரான் பெரும் பங்களிப்பைச் செய்துள்ள அதே வேளை அவரது 'நம்பிக்கை' நாடகத்தில் பல குறைகளைச் சுட்டிக் காட்டி, தமிழ்க் கலாசாரத்தைச் சிதைக்கும் இக் காட்சிகள் தவிர்க்கப்படவேண்டிய ஒன்றாகும் என்றார்.

ஆசிரியர் து. தர்மானந்தசிவம் பேசுகையில், யதார்த்த ரீதியான சிந்தனைகளை முன்வைத்து உருவாக்கப்பட்ட இத் தொலைக்காட்சி நாடகத்திற்கு ஒதுக்கப்பட்ட நேரம் போதியதாக இல்லாதது ஒருபெரும் குறையாகும் என்றார். டாக் கே. வி. கே. திருலோகமூர்த்தி பேசுகையில், கடந்த காலங்களில் கிளிநொச்சியில் இலக்கிய விமர்சன நிகழ்ச்சிகளை நடத்தும் போது விமர்சகர்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவியதாகவும், அந்த நிலை இன்று மாறி நல்ல பல விமர்சகர்கள் இங்கு உருவாகி

(7-ம் பக்கம் பார்க்க)

## மலிவு விற்பனை

தரமான உடுபிடவைகளையும் Ford Suitcase வகைகளையும் தேர்ந்தெடுத்து வரும் பண்டிகைக்காலத்தை சிறப்பாக ஒருபடி முன்னேற்றத்துடன் கொண்டாடுங்கள். **மலிவு விலையில்** உடுபிடவைகளைப்பெற:

**லேடன் இன்டஸ்ரியஸ் லிமிட்டெட்**
தயாரிப்புகளைப்பெற இன்றே விரையுங்கள்:
ஞாயிற்றுக்கிழமைகளிலும் விற்பனை நடைபெறும்.

**லேடன் காமன்ஸ்,**
86, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(2485) தொலைபேசி: 22330

## PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES

# COMPUTER
## Programming Courses
for
### Professionals and School leavers
(6 MONTHS COURSE)

**Classes Commence on 18th January, 1986**
WEEK-END COURSES

Lectures by:
**Mr. N S. RAJAH,**
B. Sc. (Eng.) Hons. (Lond.) A.M.I.C.E.

G. C. E. O/L பரீட்சை முடித்துக்கொண்டு இருக்கும் மாணவர்களுக்கு
**ஓர் அரிய சந்தர்ப்பம்**

1. **வீட்டு மின் இணைப்பு** (ELECTRICAL HOUSE WIRING)
2. **கடைச்சல் யந்திர இயக்குநர்** (LATHE OPERATOR)
3. **மின் ஒட்டு வேலை** (ARC WELDING)

மூன்று மாத காலப் பயிற்சி
**3-1-86 வெள்ளிக்கிழமை** ஆரம்பமாகிறது.

மோட்டார் வாகனங்கள்
பரிசோதித்தல்
எல்லா நாட்களிலும் நடைபெறும்.

பதிவாளர்.
REGISTRAR.
59, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

# இஸ்ரேலுடன் சோவியத் யூனியன் மீண்டும் ராஜதந்திர உறவு

(வாஷிங்டன்

சோவியத் யூனியன் அடுத்த வருட பெப்ரவரி மாதத்திற்குள் இஸ்ரேலுடன் ராஜதந்திர உறவுகளை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தகவலை அமெரிக்காவின் பிரபல யூதத் தலைவரான ஏபிரகாம் கூப்பர் தெரிவித்தார்.

அமெரிக்காவிலுள்ள சோவியத் தூதரக வட்டாரங்களே தமக்கு இத்தகவலை தெரிவித்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஆனாலும் இதுபற்றி அமெரிக்க ராஜாங்க திணைக்கள அதிகாரியிடம் கருத்துக்கேட்டபோது அவர் தமக்கு இது பற்றி எதுவும் தெரியாது என்று கூறினார்.

அமெரிக்கா எப்போதும் இந்த யோசனையை வரவேற்று வந்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

1967-ம் ஆண்டு இஸ்ரேல்-அரபு யுத்தத்தை அடுத்து இஸ்ரேலுடனான ராஜதந்திர உறவுகளை சோவியத் யூனியன் முறித்துக் கொண்டது தெரிந்ததே. (செ)

உலகச் செய்திகள்

## இன்று

[மானிப்பாய்]

வதிரி அபிவிருத்தி நிறுவன - நூலக வாசகர் ஒன்றியத்தின் மாதாந்தக் கருத்தரங்கு நூலக மண்டபத்தில் இன்று சனிக்கிழமை மாலை நடைபெறவுள்ளது. கருத்தரங்கில் புலோலி கால்நடை அபிவிருத்தி நிலைய உதவிப் பணிப்பாளர் டாக்டர் எம். தங்கராசா கலந்து கொண்டு சிறப்புரை வழங்குவார்.

## இலங்கைத்தூதரக அறிக்கை இந்தியப் பிரதமருக்கு கையளிப்பு

(கொழும்பு)

புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதரகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரதி இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் திரு. பேர்னுட் திலகரத்தின இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி மூலம் அனுப்பிவைத்தார்.

''வடபகுதி மக்களுக்கு எதிராக இறுதித் தாக்குதல் ஒன்றை மேற்கொள்ள இலங்கை அரசு தயாராகியுள்ளது என்று தமிழ்ப் பிரிவினைவாதக் குழுக்கள் முன்னர் தெரிவித்த குற்றச்சாட்டுகளை நிரூபிக்கவே இக்குழுக்கள் மோசமான செய்திகளை வெளியிட்டு வருகின்றன'' என்று திரு பேர்னுட் திலகரத்தின கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் பி. ரி. ஐ., யு. என். ஐ. போன்ற செய்தி நிறுவனங்கள் மிகைப்படுத்தித் திரித்துக் கூறும் சென்னையில் உள்ள தமிழ்ப் பிரிவினைவாதக் குழுக்களை அடிப்படையாகக் கொண்ட செய்திகளை வெளியிட்டுவருகின்றன என்றும் அவர் வருத்தம் தெரிவித்துள்ளார்.

## கடும்மழை, உறைபனி

(புதுடில்லி)

இந்தியாவின் வடக்குப் பிரதேசங்களில் கடும்மழையுடன் உறைபனியும் பெய்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காஷ்மீர் பள்ளத்தாக்கு, ஜம்மு-ஸ்ரீநகர் நெடுஞ்சாலை, உத்தரப்பிரதேசங்களில் கடும் உறைபனி கடந்த சில தினங்களாகப் பெய்துவருகிறது.

பல பிரயாணிகள் இடைநடுவில் சிக்கியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (செ)

## இராணுவச் சட்டம் நீக்கப்படுமா? கைதான 260 பேர் விடுதலை!

(கராச்சி)

பாகிஸ்தானில் கடந்த சில தினங்களில் கைதுசெய்யப்பட்ட 250க்கும் மேற்பட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்த இவர்கள், பாகிஸ்தானின் சிற்பி மொகமட் அலி ஜின்னாவின் நினைவை ஒட்டிப் பல பொதுக்கூட்டங்களை ஒழுங்குசெய்தபோதே கைதுசெய்யப்பட்டனர்.

பாகிஸ்தானில் கடந்த எட்டரை ஆண்டுகளாக அமுலிலிருந்துவரும் இராணுவச் சட்டம் இன்னும் சில தினங்களில் நீக்கப்படுமென எதிர்பார்க்கப்படும் வேளையிலேயே இத்திடீர் கைதுகளும் விடுவிப்புகளும் நடந்துவருகின்றன. (செ)

## சுகாதார நிலையம்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை மேற்கு ஆரம்ப சுகாதார கவனிப்புக் குழு, வட்டுக்கோட்டை கண்ணகைஅம்மன் ஆலயத்திற்கு அண்மையில் பொதுமக்களின் நலன்கருதி சுகாதார நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

சமாதான தொண்டர்களின் உதவியுடன் இந்நிலையத்தில் இப்பகுதியிலுள்ள சிறு பிள்ளைகளுக்கு தொற்றுநோய்த் தடுப்பு ஊசி மருந்து ஏற்றுதல், கர்ப்பிணிகளுக்குசிகிச்சையளித்தல் ஆகியன மேற்கொளப்பட்டு வருவதாக குழுவின் தலைவர் திரு. செ. சந்தசாமி தெரிவித்தார். நிலையத்திற்குத் தேவையான மருந்து வகைகள் கிடைத்ததும் வைத்திய சேவைகளையும் ஆரம்பிக்கக் கூடியதாக இருக்குமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வரி அறவிடப்படும்

(வவுனியா)

வவுனியா நகர எல்லைக்குள் இருக்கும் ஆறு பொதுபாவனை தண்ணீர்க்குழாய்களில் நீரைப் பெறுபவர்கள் வரிகட்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இது தொடர்பான அறிவித்தல் விரைவில் வெளிவரும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## போக்லாந்து தீவு பற்றிய உரிமைப்பிரச்னை

(லண்டன்)

பிரச்னைக்குரிய போக்லாந்து தீவுகள் மீது ஆட்சி செலுத்த ஆர்ஜன்டீனு எடுத்துவரும் எந்த முயற்சியையும் பிரிட்டன் உறுதியாக எதிர்க்கும் என்று பிரதமர் திருமதி மார்கிரட் தாட்சர் கூறியுள்ளார்.

போக்லாந்து மக்களுக்குவிடுத்த கிறிஸ்மஸ் வாழ்த்தொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த மாதம் ஐ. நா.வில் இவ்விஷயம் சம்பந்தமாக நடந்த விவாதத்தில் பிரிட்டனுக்கு எதிராக வாக்களித்த நேசநாடுகளை அவர் கண்டித்தார்.

ஆர்ஜன்டீனுவுக்கு அருகில் இருக்கும் போக்லண்ட் தீவின் ஆட்சியுரிமை பற்றிய பிரச்னை காரணமாக கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் இவ்இரு நாடுகளும் யுத்தமொன்றில் ஈடுபட்டது தெரிந்ததே.

## சவூதியில் திருடினர்களாம்! மூவருக்கு சிறைத் தண்டனை

(சவூதியிலிருந்து எம். சுடேந்திரன்)

சவூதி அரேபியாவில் கடை ஒன்றில் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட வடபகுதி இளைஞர் மூவர் அதற்குரிய தண்டனைகளை அனுபவித்துவருகின்றனர்.

கடையொன்றில் களவாடியபோது இவர்கள் அகப்பட்டுக்கொண்டார்களாம்.

பிரஸ்தாப மூவரும் மராட் என்னுமிடத்திலுள்ள கடை ஒன்றில் பெறுமதியான பொருள் ஒன்றை அபேஸ் செய்து நழுவமுயன்றபோது கடைக்காரரிடம் மாட்டிக் கொண்டார்கள் என்று தெரிவிக்கப்படுறது.

துப்புரவு வேலையை மேற்கொள்ளும் கம்பனி ஒன்றில் பணியாற்றிய இவர்கள், மராட் பொலிசாரின் விசாரணையுடன் வழங்கப்படும் தண்டனைகளை அனுபவித்த பின்னர் சவூதியின் தலைநகரான றியாட்டிலுள்ள முத்தக்களி சிறைச்சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டு அங்கிருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள என்று தெரிவிக்கப்பட்டது.

## நுளம்பு அபாயம் அதிகரிப்பு சுகாதாரத் திணைக்களம் எச்சரிக்கை

[கொழும்பு]

மூளைவீக்கநோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் பிரதேசங்களில் வாழும் மக்கள் இரவு படுக்கைக்கு செல்லும் முன்னர் உடலில் புல்லெண்ணையை பூசிக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இலங்கை சுகாதார திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையொன்றில: மக்கள் நுளம்பு வலைகளை பாவிக்குமாறும். இரவில் வீட்டில் நுளம்புச் சுருள்களைப் பாவிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

யானைக்கால் நோயைத் தோற்றுவிக்கும் நுளம்புவகையைப் போன்ற நுளம்புவகையென்ற மூளைவீக்கநோயை உண்டாக்குகிறதென்றும், இவை பெரும்பாலும் நெல் வயல்களிலும், சதுப்பு நிலங்களிலும் இனப்பெருக்கம் செய்கின்றன என்றும் இவ்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது.


பவர்ஸ் உரம்

இணையற்றது

ரூபா 2,000/- க்குப் மேல்

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
5, மேல் சத்தம்ஸ் வீதி,
கொழும்பு-1.

### மணிவாக்கு

காரியத்தைக் கடினமாக்குவது சோம்பேறித் தனம். அதைச் சுலபமாக்குவது உழைப்பு.

—பிராங்ளின்

# "யாழ். மாநகரசபை எதிர்காலத்தில் இயங்க முடியாத இக்கட்டான நிலையில் உள்ளது"

## ஆணையாளர் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எதிர் காலத்தில் இயங்கமுடியாத ஒரு இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம், நல்லூர் இந்து விடுதியில் நடந்த வரவு செலவுத்திட்ட கூட்டத்தில் கூறினர்.

திரு. சிவஞானம் மேலும் கூறியதாவது:

"வழமையாக களியாட்ட வரியாக நகரிலுள்ள பத்துக்கு மேற்பட்ட தியேட்டர்கள் மூலம் வருமானம் வந்தது. இந்த வருமானம் 82-ம் ஆண்டு 30 லட்சம் ரூபாவாக இருந்தது. கடந்த வருடம் 20 லட்சம் ரூபாவாக எதிர்பார்க்கப் பட்டது. ஆனல் கிடைத்தது 5 லட்சம் ரூபா மாத்திரம் தான். இதனல் 25 லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

'இந்தவருமானக்குறைவுக்கு இன்றுள்ள பதற்றநிலையே காரணம். தற்போதுள்ள சூழ்நிலையில் நகரிலுள்ள பல வர்த்தகநிலையங்கள் மூடப் பட்டுவருகிறது. இதனல் அவர்களிடமிருந்து கிடைத்துவந்த லைசென்ஸ் கட்டணம், வியாபார வரி எல்லாம் குறைந்து விட்டன.

"சபையின் நிரந்தர வைப்பு நிதியின் வட்டி முறைந்துவிட்டதால் 4 லட்சம் ரூபா குறைந்துள்ளது. இதனல் இதுவரை மக்களுக்குச் சபை வழங்கி வந்த சேவைகள் அதே நிலையில் வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. 65 லட்சம் ரூபா சேவையை குறைக்க வேண்டியநிலைஏற்பட்டுள்ளது.

"மக்களுக்குத் தொடர்ந்து சேவையாற்றவேண்டிய நிர்ப் பந்தம் இருக்கிறது. இதனல் வருமானத்தைக் கூட்டவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள்மீது பழுவைச் சுமத்த விரும்பவில்லை.

"வாடகைகட்டடங்களிலும் அமைந்துள்ளதால் வருடம் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா வாடகை செலுத்த வேண்டியுள்ளது.

"சபையின் 6 டிரக்டர்கள இந்த வருடம் கடத்தப்பட்டு விட்டது. இன்னும் திருப்பித் தரப்படவில்லை. இதனல் சில சுகாதார சேவைகளுக்காக பழுதான வாகனங்களைத் திருத்தவேண்டியுள்ளது.

"எரிபொருள் கிடைக்காததினல் சபை விதிகளுக்கு மாருக கூடிய பணம் கொடுத்து எரிபொருள் வாங்கவேண்டிய நிலையில் இருக்கின்றேம். சபையில் குற்றங்குறை காண்பவர்கள் இவற்றைச் சிந்தித்துப்பார்க்க வேண்டும்." (ε)

## நமது நோக்கு

# காங்கிரஸ் மகாசபையும் இலங்கைத் தமிழரும்

நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய தேசிய காங்கிரஸ் பம்பாயில் தனது முதலாவது புரட்சி மாநாட்டை நடத்திய அதே பாடசாலைக் கட்டிடத்தில் இந்த வரலாற்றுப் புகழ்மிக்க ஸ்தாபனத்தின் நூற்றாண்டு மாநாடு நேற்று ஆரம்பமாகியுள்ளது.

இந்திய விடுதலைக்காக உயிர்த் தியாகங்கள் புரிந்த அதிசிரேஷ்டத் தலைவர்களின் வழித்தோன்றல்களான இன்றைய இந்திய இளம் தலைமுறையினரில் சுமார் ஒரு லட்சம் பேருக்கு மேற்பட்ட பேராளர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்கிறார்கள் நாட்டுக்கும் நாட்டு மக்களின் உயர்வுக்கும் தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் தியாகம் செய்து சாதாரணத் தொண்டர்களோடு தொண்டர்களாகத் தம்மை மாற்றிக்கொண்டுவிட்ட ஒரு தியாகக் குடும்பத்தின் இளம் வாரிசான திரு. ராஜீவ் காந்தி அவர்கள் காங்கிரஸ் மகாசபையின் இன்றைய தலைவராகப் பரிணமித்திருப்பது இந்திய மண்ணுக்கே உரிய ஒரு பாரம்பரியமாகும்.

மனிதர்களை - அவர்கள் எந்த நாட்டவராலுனும் மக்கள் மதிப்பதும் தலைவர்களாக ஏற்றுக்கொள்வதும் அவர்களின் சொந்தத் தகுதிகளையும் குணநலன்களையும் பொறுத்தே அமைகின்றது. இந்தத் தகுதிகளுடன் குடும்பப் பாரம்பரியமும் அதற்கேற்ப அமையும் பொழுது அவர்கள் பன்மடங்கு உயர்ந்துவிடுகிறார்கள். மக்களை ஏமாற்றுகிறவர்கள் என்றே ஒருநாள் தூக்கி எறியப்படுவது நிச்சயம்.

பம்பாயில் இடம்பெறும் நூற்றாண்டு விழாவில் உலகெங்குமிருந்து சுமார் 20 ஆயிரம் பிரதிநிதிகள்கலந்து கொள்கிறார்கள். இவர்களில் குறிப்பாக எல்லை காந்தி என்றழைக்கப்படும் கான் அப்துல் கபார்கானும் ஒருவர். பட்டாணியரின் விடுதலைக்காகத் தம் ஆயுள் முழுவதும் போராடிவருபவரான இப்பெருமகன், தள்ளாத வயதில் தமது புதல்வரோடும், பேரனேடும் இந்த விழாவில் கலந்துகொள்ள வந்திருப்பது ஒரு சிறப்பம்சமாகும்.

பாரத மக்கள் இன்று உலக வல்லரசுகளோடு தலைநிமிர்ந்து நிற்கவும், வலுவிழந்த நாடுகளின் உரிமைக்காக உலக அரங்குகளில் துணிச்சலோடு குரல் கொடுக்கவும் தம்மைத் தகுதிப்படுத்திக் கொண்டுள்ளமைக்கான பெருமைகள் யாவும் அதற்கான ஒரு பாரம்பரியத்தை உருவாக்கிக்கொடுத்த காங்கிரஸ் மகாசபையையும் அதனை வழிநடத்தி வந்துள்ள தலைவர்களையுமே சாரும்.

1971ம் ஆண்டு கிழக்குப் பாகிஸ்தானில் விடுதலை வேண்டிப் போராடிய வங்காள மக்களின் நியாயபூர்வமான நிலைமையை உணர்ந்து அவர்களின் சார்பாக நின்றமையும் ஒரு கோடி வங்காளிகள் அகதிகளாக எல்லையைக் கடந்து வந்ததினல் ஏற்பட்ட சமூக பொருளாதார சுகாதாரப் பிரச்னைகளை வலுவுடன் எதிர்கொண்டு அம் மக்களின் விடுதலைக்கு உறுதுணையாக நின்று 'பங்களா தேசை' உருவாக்கிக்கொடுத்தமையும் காங்கிரஸ் மகாசபையின் வழி வந்த பெருமைக்குரிய பாரம்பரிய பண்புகள் என்பதில் சந்தேகமில்லை.

இந்தப் பாரம்பரிய உணர்வும் வழிகாட்டலும், இன்று இலங்கையில் நியாயம் கோரிநிற்கும் தமிழ் இனத்தவர்களின் சார்பிலும் பிரதிபலிக்க வேண்டுமென்றே உலகம் முழுவதும் வாழ்ந்துவரும்தமிழ்இனத்தவர்கள்எதிர்பார்க்கிறார்கள்.

தாம் இழந்துவிட்ட உரிமைகளைத் திரும்பப் பெறுவதற்காக கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக அமைதி வழியில் போராடிக் களைத்துவிட்ட இந்த மக்களின் வழித் தோன்றல்களே இன்று விரக்தியுற்று ஆயுதமேந்திய போராளிகளாக மாறியுள்ளனர். இந்நிலைமை அவர்கள் தாமே வலிய ஏற்றுக் கொண்டதொன்றல்ல; காலமும், சூழ்நிலைகளும் அவர்களை இந்நிலைக்கு வலிய தள்ளிவிட்டுள்ளன.

தேடுதல் என்றும், விசாரணையென்றும் நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்கள் சித்திரவதைக்குள்ளாகி வருகிறார்கள். அன்றாடம் படுகொலைகள் நடைபெற்று வருகின்றன.

தெற்காசிய நாடுகள் பலவற்றிலும் சுதந்திரத்தாகம் சுடர் விடுவதற்கு உணர்ச்சியும் உத்வேகமும் அளித்துள்ள இந்திய காங்கிரஸ் மகாசபை இன்று நடாத்தும் தனது நூற்றாண்டு மகாநாட்டில் நிச்சயமாக இங்குள்ள நிலைமை பற்றியும் ஆராயும் என்றே நம்புகின்றேம்.

பெரிதும் அரசியல், மயமான ஒரு பிரச்னையில் ராணுவத்தை ஈடுபடுத்தி அப்பாவி மக்களை அழித்து வரும் இந்த நாட்டு ஆட்சியாளர்களின் கண்களை திறக்கவும், நியாயபூர்வமான ஒருதீர்வு ஏற்படும் வகையில் அவர்களைச் செயல்படச் செய்யவும் பம்பாயில் கூடியுள்ள காங்கிரஸ் மகாசபை உதவவேண்டும்.

## வெங்காயச் செய்கை பாதிப்பு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை ஆகிய பகுதிகளில் அண்மையில் மேற்கொள்ளப் பட்ட தைப் போக வெங்காயச் செய்கை தற்போது பெய்து வரும் அடை மழையினல் பெரும் சேதமடைந்துள்ளது. இதனல் அதிகவிலை கொடுத்து விதை வெங்காயம் வாங்கி நாட்டிய இப்பகுதி விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர்.

# புதிய ஓய்வூதியக் கணிப்புத் திட்டம்

## — ஒரு நோக்கு

இவ்வாண்டு ஜனவரித்திங்கள் தொடக்கம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ள ஓய்வூதியக் கணிப்புத்திட்டம், ஐம்பத்தைந்து [55 வயதில் அல்லது அதற்குப் பின்னர் ஓய்வுபெறுவோர்க்கு கூடுதலான நன்மை பயப்பதாக அமைகின்றது. இத்திட்டத்தின்படி ஓர் அரசாங்க ஊழியர் பெறவுள்ள ஓய்வூதியம் துரிதமாகக் கணக்கிடப்படுகின்றது. நீண்டகாலமாக ஓய்வூதியக் கணிப்புகளில் முக்கியத்துவம் பெற்ற ஊழியரின் சேவைக்காலம் இப்புதிய திட்டத்தில் முக்கியத்துவம் பெறவில்லை. இதற்குப்பதிலாக அரசாங்க சேவையிலிருந்து ஊழியர் இளைப்பாறும்பொழுது, அவருக்குள்ள வயதிற்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. தற்பொழுதுள்ள திட்டம் சேவைமூப்பிற்கு இடமளிக்கவில்லை. ஓய்வூதியக்கணிப்பினை துரிதமாகக் செயற்படுத்தும் நோக்கத்திற்காக தொன்றுதொட்டு நடைமுறையிலிருந்த சேவைக்கால அடிப்படையிலான கணிப்பினை ஒதுக்கிவிடல் பொருத்தமற்றது.

புதிய திட்டத்திற்கமைய 55 வயதில் ஓய்வுபெறும் அரச ஊழியர் ஒருவர் தாம் இறுதியாகப் பெற்ற சம்பளத்தில் ஏறத்தாழ எண்பத்தைந்து நூற்றுவீதத்தினை (85%) ஓய்வூதியமாகப் பெறமுடியும். கூடுதலான ஓய்வூதியக்கொடுப்பனவை சகல அரசாங்க ஊழியர்களும் வரவேற்கும் அதேவேளையில் கூடுதல்காலம் சேவைபுரியும் உத்தியோகத்தர்களுக்கு மனச்சோர்வினை ஏற்படுத்துமொரு திட்டமாக இப்புதியதிட்டம் அமைவதாகத் தோன்றுகின்றது. உதாரணமாக நாற்பத்துநான்கு [44] வயதில் சேவையில் சேர்ந்து கொள்ளும் ஓர் அரச ஊழியர் தமது 55 வது வயதில் தாம் இறுதியாகப் பெற்ல சம்பளத்தில் 85%ஐ ஓய்வூதியமாகப் பெற உரித்துடையவராகின்றார். ஆனல் இருபதுவயதில் சேர்ந்துகொள்ளும் ஒருவர் மேற்கூறப்பட்ட ஓய்வூதியச் சலுகையைப் பெற முப்பத்தைந்து (35) வருட கால சேவையினைப் பூர்த்திசெய்ய வேண்டியுள்ளது. இத்தகையோரில் பெரும்பாலானோர் தமது சம்பளத்தின் உச்ச நிலையை அடைந்து ஓய்வூதியம் பெற நீண்ட காலம் காத்திருக்கவேண்டிய விரக்தி நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இளவயதில் சேவையில் சேரும் அரச ஊழியர்களைப் பொறுத்தளவில் இப்புதிய நடைமுறை ஏற்புடையதா? கூடுதல் காலம் சேவைபுரியும் ஊழியர்களுக்குப் புதிய திட்டத்தில் சில நன்மை பயக்கும் ஏற்பாடுகள் சேர்த்துக்கொள்ளப்படல் நியாயத்தின்பாற்பட்டதே. ஒரு குறிப்பிட்ட காலசேவை (20 வருடமளவில்) யின் பின் சுய விருப்பத்தின் பேரில் ஓய்வுபெற அனுமதி வழங்கப்படலாம். இளமையும் துடிப்புமுள்ளவர்கள் சேவையில் சேர்ந்து தம்பங்களிப்பை அரசாங்கசேவைக்கு ஆற்ற.புதியதிட்டம் ஊக்குவிப்பு வழங்கவில்லை.

**பொ. ச. ஞானசீலன்**

புதிய ஓய்வூதியத்திட்டத்திற்கமைய அரசாங்க ஊழியர் ஒருவர் தமது சேவைக் காலத்தில் பெற்ற சம்பளமற்ற லீவுக்கமைய மாதா விகிதம் (ஒருமாதச்சம்பளமற்றலீவுக்கு அல்லது அதன் பகுதிக்கு)0. 2 நூற்று வீதத்தினை தமது ஓய்வூதியத்திலிருந்து இழக்கவேண்டி நேரிடுகிறது. அரசாங்க சேவையில் கூடுதல் காலம் சேவை செய்வோர் குறைந்தளவு காலம் சேவை செய்வோரிலும் சம்பளமற்ற லீவினைப் பெற கூடுதலான சந்தர்ப்பங்களுள்ளன. இதனல் கூடிய காலம் சேவை புரிவோர் ஓய்வூதியக் கணிப்பில் மறைமுகமாகப் பாதிப்படைகின்றனர்.

### ஓர் ஆலோசனை

இப்புதிய திட்டத்திற்கு பின் வருமாறு ஒரு சிறிய திருத்தத்தினை அமைத்தால் சகல ஊழியரும் நன்மை அடைய ஏதுவாக இருக்கும்.

தற்போது குறைந்த பட்சம் பத்து (10) வருட சேவையினைப் பூர்த்தி செய்த ஐம்பத்தைந்து (55) வயதினை எய்திய அரச ஊழியர் சேவையிலிருந்து இளைப்பாற உரிமை உண்டு அதாவது ஓர் ஊழியரின் வயதினைக் குறிக்கும் வருடங்களின் எண்ணிக்கையும் (55) சேவையாற்றிய வருடங்களின் எண்ணிக்கையையும் (10) கூட்டும் பொழுது அறுபத்தைந்து (65) அல்லது அதற்கு மேற்பட்ட தொகையைப் பெறின் ஓய்வு பெற அனுமதியுண்டு.

இதே அடிப்படையில் சேவைபுரிந்தஆண்டுத்தொகை (சே.ஆ) அவ்வூழியரின் வயதுக்குரிய ஆண்டுத் தொகையினையும் (வ.ஆ] சேர்க்கும் பொழுது 65 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினைப் பெறின் ஓய்வு பெற அனுமதிக்சப்படலாம். இவ்வடிப்படையில் சேவைக்காலத்திற்கும் முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. உதாரணமாக 46 வயதுடைய (வ.ஆ)ஓர் அரசாங்க ஊழிபர் 19 வருட கால சேவையை (சே.ஆ) பூர்த்தி செய்யின் அவ்வூழியர் சுய விருப்பின் பேரில் ஓய்வுபெற இத்திருத்தம் வகை செய்யும். எனினும் குறைந்தபட்ச 10 வருடசேவை நிந்தனை தொடர்ந்தும் பேணப்படவேண்டும். அரசாங்க சேவையைப் பொறுத்தளவில் ஒருவரது வயது ஆண்டினைவிட [வ.ஆ) சேவை ஆண்டே (சே.ஆ) முக்கியமானதும் முதன்மையானதும் ஆகும்.

புதியதிட்டம் இத்திருத்தத்துடன் இணைந்து நடைமுறைப் படுத்தப் படின் சகலதரப்பு அரசாங்க ஊழியர்களும் திருப்தியடைவர் என்பதுதிண்ணம்.

# சிக்கனமான வைத்திய முறை

(வண்ணார்பண்ணை)

"ஹோமியோபதி வைத்திய முறையினைஅழியவிடாதுஅதன் வளர்ச்சிக்காக அரும் சேவையாற்றிவரும் ஒரேயொரு சங்கம் வடஇலங்கை ஹோமியோபதி வைத்தியர் சங்கமாகும். இலகுவான முறையில் மக்கள் பிணி தீர்க்கும் இந்த வைத்திய முறையினை கட்டிக் காக்க வேண்டிய பொறுப்பு இச்சங்க உறுப்பினர்களது தலையாய கடமையாகும்."

என்று அண்மையில் யாழ்ப் பாணத்தில் நடந்த வட இலங்கை ஹோமியோபதி வைத்திய சங்கத்தின் ஆட்சிக் குழுக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிய மேற்சடி சங்கத்தின் தலைவர் டாக்டர் அ. கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

டாக்டர் க. லோகேஸ்வரன் பேசுகையில், சிக்கனமான சிறந்த வைத்தியமுறையென உலக நாடுகளால் போற்றப்பட்டுவரும் ஹோமியோபதி முறை எமது நாட்டில் மங்கிப்போக நாம் இடமளிக்க முடியாது. இந்த வைத்திய முறையின் மூலம் மக்கள் பயனடைய அரசு உதவ வேண்டும் என்றார்.

## சங்கிலி மன்னன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்து பாதுகாப்பான ஒரு இடத்தில் இதே போன்ற அமைப்புக் கொண்ட ஒரு ஞாபகார்த்த நகரமண்டபம் அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்படும்.

யாழ். திறந்தவெளி அரங்கு தற்போதுள்ள நிலையில் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. வேறோர் இடத்தில் இதே போன்ற திறந்தவெளி அரங்கு நிறுவப்படும்.

★ சுப்பிரமணியம்பூங்காப் பகுதிக்கு எவருமே செல்லமுடியாத நிலையுள்ளது. இதற்குப் பதிலாக புதிய செயலகத்துடன் சேர்த்து பூங்கா ஒன்று அமைக்கப்படும் நகரில் சனப்பெருக்கம் அதிகரித்துள்ளதால் பல்வேறு இடங்களிலும் சிறிய பூங்காக்கள் அமைக்கப்படும்.

★ கோட்டைப்பகுதியில் தற்போதுள்ள களஞ்சியப் பிரிவு, தொழில்கூடம் ஆகியவையும் விரைவில் வேறு இடங்களுக்கு மாற்றப்படும்.

★ யாழ். மாநகரசபையின் எல்லைகளின் நான்கு திசையிலுமுள்ள மத்திய இடமான சங்கிலித் தோப்பில், சபையின் புதியசெயலகம் நிறுவப்படும். மின்சார களஞ்சியப் பகுதி, சுகாதாரம், நூல் நிலையம், மராமத்து மற்றும் சகல அலுவலகங்களும் இந்த செயலகத்தில் அமையும்.

★ யாழ். நகரில் வருடா வருடம் 40 வீதமானோர் வெள்ளத்தினால் பாதிக்கப்படுகிறார்கள். இதனைத் தடுப்பதற்கு வடிகால் அமைப்புக்கு முன்னுரிமை அளித்து ஒரு ஆய்வு நடத்தப்பட்டுள்ளது

★ 'தீயணைக்கும் படை' 86 ஜனவரி 27 ந்திகதி சம்பிரதாயமுறைப்படி கனேடிய ஸ்தானிகரால் ஆரம்பித்து வைக்கப்படும். இதற்கான கட்டடவேலை பூர்த்தியாகியுள்ளது.

★ பெரியகடை மரக்கறிச் சந்தையை சுகாதார வசதியுடன் மாற்றியமைக்க ஒன்றரை லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வேலை 86ஜனவரி 6ம் திகதி ஆரம்பமாகும்.

★ வீதிகளில் குப்பைகளுடன் வாழைமரங்கள், போடப்பட்டிருந்தால், அவை 86 ஜனவரி 1ம் திகதி முதல் அகற்றப்படமாட்டாது.

★ யாழ். நவீன மார்க்கட் 3ம் கட்ட வேலைகள், சூழ்நிலை நல்லாக இருந்தால், விரைவில் ஆரம்பிக்கப்படும்.

★ சபையின் அச்சுவேலைகளுக்கு அச்சகப் பகுதி ஒன்று ஆரம்பிக்கப்படும்.

★ யாழ். நகருக்கு தண்ணீர் பெறும்பகுதியில் உப்புத் தன்மை காணப்படுவதாலும், அப்பகுதி விவசாயிகள் பாதிக்கப்படுவதாலும், வற்றாத ஊற்றான நிலாவரையிலிருந்து யாழ். நகருக்கு நன்னீர் பெறுவதுபற்றி இம்மாதம் 30ம் தேதி ஆலோசிக்கப்படும். யூனிசல் திட்டத்தின்கீழ் நகரில் நான்கு பகுதிகளுக்கு கிணறுகள் மூலம், குழாய்நீர் வழங்கப்படும்.

## இந்திய காங்கிரஸ்.

(1ம்பக்க தொடர்ச்சி)

திரு. ராஜீவ்காந்தி பேசுகையில் ''இரண்டாவது நூற்றுண்டில் காலடி எடுத்துவைக்கும் காங்கிரஸ்கட்சி இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச்சென்றதுமல்லாமல் உலகநாடுகளிடையே இந்தியாவுக்கு ஒரு முக்கிய இடத்தையும்பெற்றுக் கொடுத்திருக்கிறது'' என்றார்.

காங்கிரஸ் கட்சியின் பொன் விழாக் கொண்டாட்டங்களும் இங்குதான் நிகழ்ந்ததென்பதையும் அவர் நினைவுகூர்ந்தார்.

பம்பாய் மத்தூர்காஷ்நினைவு மண்டபத்தில் காங்கிரஸ் காரியக் கமிட்டியின் கூட்டம் ஆரம்பமாகியது. கூட்டத்தின் முடிவில் கட்சித்தலைவருக்குரிய தேர்தல் அடுத்துவரும் ஜூலை மாதம் 26ம் திகதியில் நடத்த முடிவுசெய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் பேசிய காங்கிரஸ் சிறுபான்மை இனத்தவரின் குழு உறுப்பினர் ''நாட்டைப்பிளவுபடுத்த சில தீயசக்திகள் எடுக்கும் முயற்சிகளுக்கு பலியாகவேண்டாம்'' எனக் கேட்டுக்கொண்டார்.

காங்கிரஸ் நூற்றுண்டுவிழாவில் பங்குபற்றவென உலகின் பல பாகங்களிலிருந்தும் தூதுக் குழுக்கள் வந்துள்ளன.

ஏழுபேர்கொண்ட சோவியத்யூனியனின் தூதுக்குழுவுக்கு சோவியத் செய்தி ஸ்தாபனமான 'டாஸ்'ஸின் பிரதம ஆசிரியர் திரு. அகானேவ் தலைமை தாங்குகிறார். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் அதன் தலைவர் திரு. எஸ். தொண்டமான் தலைமையிலான தூதுக்குழு ஒன்றும் கலந்துகொள்கிறது.

இன்று சனிக்கிழமை நூற்றுண்டுவிழா முத்திரையொன்றும் வெளியிடப்படும்.

## மக்கள் வெளி..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஆகியோருக்கு பாதிக்கப்பட்ட மக்கள் புகார் தெரிவித்துள்ளார்கள்.

யாழ்ப்பாணம், தீவுப்பகுதி முதலானபகுதி மக்களும் கிளிநொச்சியில் பாதுகாப்பில்லை எனக்கருதி நீண்டகாலமாக வாழ்ந்த கிளிநொச்சியைவிட்டு சொந்த இடம் திரும்புடன்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வைத்திய அதிகாரிகள், டாக்டர்கள், போன்றோரும்மற்றும் அரச ஊழியர்களும் இங்கு கடமையாற்ற அச்சம்கொண்டுள்ளனர். பலர் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டனர். மேலும் சிலர் இடமாற்றம் பெற முயல்வதாகவும் தெரிய வந்துள்ளது. இந்நிலை நீடிக்குமானல் விரைவில் கிளிநொச்சி மாவட்டம்பெரும் பாதிப்புக்கு ஆளாகும் என்று அஞ்சப்படுகிறது.

## ராஜீவ்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மன்னர் - இராமேஸ்வரம் கப்பல் சேவைதடைபட்டிருப்தால் சுமார் 85 ஆயிரம் பேர் இந்தியா திரும்ப முடியாதுள்ளதாகவும்; இது விடயம் பம்பாய் மாநாட்டின் போது பிரதமர்ராஜீவ்வுடன் விரிவாக ஆராயவுள்ளதாகவும் நாடு திரும்பியதும் தொடர்ந்து நாடற்றவர்களாக இருக்கும் சுமார் 4 லட்சம் மலையகத்தமிழ் மக்களுக்கு பிரஜா உரிமை வழங்குவது சம்பந்தமாக இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவை தாம் வற்புறுத்தவுள்ளதாகவும் அமைச்சர் தொண்டமான் கூறினர்.

இலங்கை இனப்பிரச்னைக்கு இதுசம்பந்தப்பட்ட அனைவரும் சுமுகமான நிலையை ஏற்படுத்த முன்வரவேண்டும் என்று கூறிய அமைச்சர்; இது சம்பந்தமாக தாம் சமரசத் திட்டம் ஒன்றை ஜனாதிபதி ஜெயவர்த்தனவிடம் கையளித்துள்ளதாகவும், அதனை ஜனாதிபதி கொள்கைஅளவில் ஒப்புக் கொண்டுள்ளதாகவும் கூறினர். [ரா]

## ஆசிரியர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு இட்டுச் சென்றுள்ளது என அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சினல் தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் இத்திடீர் தீர்மானமானது' கல்விச் சேவைக் குழுவோ அல்லது கல்வி அமைச்சோஆசிரியர்களுக்கான வருடாந்த இடமாற்றம்சம்பந்தமான விடயத்தில் தெளிவான புரிந்துணர்வுடன்செயல்படவில்லை என்பதையே குறிக்கின்றது' என்று மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (பி)

## அரசடிச்சந்தியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டனர் என்றும், இதனைத் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுக்கள் தொடர்ச்சியாகக் கேட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## கைதான...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாதங்களின் முன்னர் கைது செய்யப்பட்டவர்களாவர்.

மூன்று இளைஞர்களின் தாய் மார்பலாலி, யாழ். கோட்டை முகாம்களுக்குப் பல தடவை சென்றும் தமது பிள்ளைகளைப் பார்க்கமுடியவில்லை என்றும் நேற்றுத் தெரிவித்துள்ளனர்.

## தாக்குதல்

[ரோம்]

ரோமாபுரி சர்வதேசவிமான நிலையத்தில் இடம்பெற்ற தாக்குதல் ஒன்றின்போது 13 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள்,

வீயன்ன சம்பவத்தில் 3 பெண்கள், ஒருகுழந்தை, மெக்சிக்கோ ராஜதந்திரி ஒருவர், இஸ்ரேல் பாதுகாப்பு ஊழியர் ஒருவர் உட்பட மூன்று பயங்கரவாதிகளும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. [ரா]


### கடைசி நேர வரிவிளம்பரம்

**விற்பனைக்கு**

''நல்ல ஜாதி ஆண் - பெண் அல்ஷேஷன் நாய்க்குட்டிகள், சிங்கர் மெஷின், மின்சார ஸ்திரிகைப்பெட்டி விற்பனைக்குண்டு. விலாசம்: வீ. ராஜசிங்கம், இல. 50, ஸ்டேசன் வீதி, சோண்டாவில் மேற்கு (கோ/இ. ம. வித்தியாலயத்திற்கு சமீபமாக). (2661)


**எம்பயர்**
7 அடித்திரையில்
10-30, 2-30, 6-30
கவுண்டமணி-ஊர்வசி
''பணம் பத்தும் செய்யும்''

**லிடோ சினிமா**
10-30, 2-30, 6-30
சிவாஜி—கே.ஆர்.விஜயா நடித்த
**திருடன்**

**வெலிங்டன்**
10-30, 2-30, 6-30
M. G. R. - ஜெயலலிதா
நம்பியார் - மனோகர்
நடித்த
**அன்னமிட்டகை**
31 முதல்
TEN BROTHERS OF SHAOLIN
(New Release)


### முதல் வருட நினைவு

**சவிரிமுத்து ஞானப்பிரகாசம்**
(அந்தோனிப்பிள்ளை)



தோற்றம்:
26-11-1928

மறைவு:
28-12-1984

''உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான். உயிர் வாழ்க்கையில் என்னில் விசுவாசங் கொள்பவன் எவனும் ஒருபோதும் சாகான்''

உங்கள் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம். பிரிவால் துயர்அடையும்,

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

37, 6ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (2657)


### ஆசிரியர்கள் தேவை

G. C. E (A/L) கணித/ விஞ்ஞான பாடங்களில் டியூட்டறிகளில் படிப்பித்து முன்னனுபவம் உடைய ஆசிரியர்கள் கொழும்பில் உள்ள கல்வி நிறுவனமொன்றிற்கு தேவைப்படுகிறார்கள். கொழும்பில் வேலை வாய்ப்பை எதிர்நோக்கியிருப்பவர்கள் விரும்பத்தக்கது. சகல விபரங்களுடனும் 31-12-85 க்கு முன் விண்ணப்பிக்கவும். த. பெ. இல: 2658.
[2658]

வீடியோ பிரசாத்தின்
### 29-12-85 வெளியீடு
சிவாஜி, ரஜனிகாந், அம்பிகா நடித்த
''படிக்காதவன்'' (Pyramid)
### வீடியோ பிரசாத்
232, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நியூ விக்ரேஸ்
### புதிய வீடியோ பட வெளியீடுகள்
1. புதிய தீர்ப்பு (V. G. P.)
விஜயகாந் - அம்பிகா
2. வேலி (V. G. P.)
ராஜேஸ் - சரிதா
### நியூ விக்ரேஸ்
எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்
யாழ்ப்பாணம். தொலைபேசி : 23532.

### வேலைவாய்ப்பு
சுவிஸ் பாமில் பொது உதவியாளர்கள் தேவை.
ஞாயிறு காலை நேரில் சந்திக்கவும்.
V. சிவசம்பு (சிவா மாஸ்ரர்)
ஏழாலை தெற்கு, சுன்னுகம்.
[2667]

FIRST TIME IN JAFFNA
### NEW YEAR BUFFET LUNCH
at
### HOTEL GNANAMS
ON SUNDAY
29th DECEMBER 1985
From 12 Noon
TICKETS: Rs. 50/- Only
Children Under 12 Years Half Rate
Limited Tickets Available at
THE HOTEL RECEPTION COUNTER
Phone: 22082 (2666)

## முஸ்லிம் மக்களுக்கு இலவச திருக்குர்ஆன்

[யாழ்ப்பாணம்]

முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களத்திலிருந்து ஒரு தொகுதி திருக்குர்ஆன் பிரதிகள் யாழ். மாவட்ட ஹிஜ்ரா கமிட்டியால் இப்பகுதி குர்ஆன் மத்ரஸாக்களுக்கு விநியோகிக்கவென பெறப்பட்டுள்ளன.

முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களத்தில் தம்மைப் பதிவுசெய்துகொண்ட குர்ஆன் மத்ரஸாக்களுக்கு வழங்கப்படவுள்ளதால் இதுவரை பதிவுசெய்துகொள்ளாத குர்ஆன் மத்ரஸாக்கள், யாழ்ப்பாணம், 29, முஸ்லிம் கல்லூரி வீதியில் வதியும் தேசிய ஹிஜ்ரா கவுன்சில் பிரதிநிதி ஜனாப் மஃரூப் ஏ. காதருடன் தொடர்புகொண்டு விபரங்களைப் பெற்றுக்கொள்வதோடு தமது மத்ரஸாவைப் பதிவதற்கான பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஏனைய பதிவுசெய்யப்பட்ட மத்ரஸாக்கள் தமது மாணவர்களின் விபரங்களைச் சமர்ப்பித்து குர்ஆன் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மத்ரஸாக்களும் எம்மிடம் விபரங்களைச் சமர்ப்பித்து குர்ஆன் பிரதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.


**VICKNA TUITION CENTRE**

52, STANLEY ROAD, JAFFNA.

[கலை வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம்வாய்ந்த நிறுவனம்.]

**A/L மீட்டல் வகுப்புக்கள்**

DAY CLASSES - 30.12.85 காலை 8.00 மணி

சனி, ஞாயிறு - 28-12-85 காலை 8.00 மணி

எமது வழமையான தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

பொருளியல் - திரு. கிருஷ்ணானந்தன்
வர்த்தகம் - திரு. இலங்கா
கணக்கியல் - திரு வன்னியசிங்கம்
அளவையியல் - திரு. சுப்பிரமணியம்
தமிழ் - திரு. குழந்தைவேல்
புவியியல் - திரு. குணராஜா
இந்துநாகரிகம் - திரு. ஐயர்
அரசியல் - திரு. மஃறூப்

குறிப்பு: இவ்வாசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை இந்நிறுவனத்தில் மட்டுமே.


# "பல்துறை மக்கள் சேவையில் தெல்லி. ப. நோ. கூ. சங்கம்"

## ஆண்டறிக்கை தரும் தகவல்

[யாழ்ப்பாணம்]

"வாகனக் கடத்தல், வழிமறிப்பு, பொருட்களைக் கொள்ளையடித்தல், எரிபொருள் தட்டுப்பாடு இவைகளின் மத்தியிலும் தெல்லிப்பழைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அத்தியாவசிய உணவுப் பொருள்களை 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்பதற்கு அமைய உறுதியுடன் விநியோகித்து வந்துள்ளது. தொடர்ந்தும் செய்து கொண்டிருக்கிறது".

இவ்வாறு திரு. சின்னத்தம்பி சிவமகாராசாவைத் தலைவராகக் கொண்ட தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தின் இயக்குநர் சபையின் 85ம் ஆண்டு வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கம் என்று சொல்லப்படுகிறது. மக்கள் இயக்கம் என்பது மக்கள் தமது தேவையைப் பூர்த்திசெய்வதற்காக ஒன்றுகூடி உறுப்பினர்களாகச் சேர்ந்து இயங்குகின்ற ஒன்றாகும். இச்சிறப்பு கூட்டுறவு இயக்கத்திற்கே உண்டு.

'ஒருவர் பலருக்காகவும், பலர் ஒருவருக்காகவும் சேர்ந்து உழைக்கின்ற கூட்டுறவு இயக்கத்தில் இயங்குகின்ற உறுப்பினர்கள் தமது தேவையை மட்டும் பூர்த்தி செய்பவர்கள் அல்லர். அவர்கள் இந்தக் கூட்டுறவு அமைப்பிலே உறுப்பினர்களாகச் சேராதவர்களது நலன்களையும் கவனிப்பவர்களாவர். இவைகளுக்கமைய தெல். ப.நோ.கூ, சங்கம் பல ஆண்டுகளாகச் சிறப்பாக இயங்கிவருகின்றது. இதற்கு மேலும் உள்ள காரணம் எமது அமைப்பு ஜனநாயக அடிப்படையில் கட்டி வளர்க்கப்பட்டு, ஸ்திரமான நிலையில் இருப்பதேயாகும்.

"எங்கே ஜனநாயகம் அற்றுப்போகிறதோ, எங்கே ஒற்றுமை குறைகிறதோ அங்கே தான் அழிவும், வீழ்ச்சியும் உண்டாகின்றன. எமது சங்கத்துக்குச் சோதனைகள். இழப்புக்கள், வேதனைச் சம்பவங்கள் பல ஏற்பட்டிருந்தபோதிலும், மன உறுதியுடன் நாம் செயற்பட்டுவந்தோம். புறச் சூழலில் வெவ்வேறு வகையான குழுநிலை நடவடிக்கைகள் இருப்பினும், அவற்றின் தாக்கங்களினால் கூட்டுறவு இயக்கம் சீரழிந்துவிடக்கூடாது. கூட்டுறவுக்கு மாறான தலையீடுகள் இயக்கத்திற்குள் ஏற்படுமானால் இயக்கம் சிதைந்துவிடும். இத்தகைய தலையீடுகள் எமது இயக்கத்துள் ஏற்படாது விழிப்புணர்வுடன் செயலாற்ற வேண்டும்,

"தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம் 1983ன் பிற்பகுதியில் கோழித் தீன் தொழிற்சாலையை ஆரம்பித்து நடத்தி வருகிறது. மேலும் கிராமிய வங்கி, எரிபொருள் நிலையம், மோட்டார் வாகனப் பகுதி, மின்தறி நிலையம், சிற்றுண்டிச்சாலை என்பனவற்றை நல்ல நிலையில் லாபகரமாக இயக்கி வருகின்றது. மேலும், மகளிர் நலன்கருடு 'மகளிர் குழு' அமைக்கப்பட்டுச் சிறப்பாகச் செயற்படுகிறது. இது மனையியல், கைப்பணி, வீட்டுத் தோட்டம் என்பனவற்றில் இல்லத்தரசிகளுக்குப் பயிற்சிகளைக் கொடுத்து வருகிறது. இதுதவிர, கல்விப் பணியிலும் ஈடுபட்டுப் பாலர் பாடசாலை, ஆங்கிலச் சுருக்கெழுத்து, தட்டெழுத்து என்பனவற்றில் மாணவர்க்கு வகுப்புகளை நடத்துகின்றது.

"சேமிப்புத் திட்டமொன்றினை அடுத்த வருடம் ஜனவரி முதல் நடைமுறைப்படுத்த சங்கம் திட்டமிட்டுள்ளது.

மேலும் சமூகப் பணிகளையும், திருவிழாக்களையும் செய்வதிலும் இச்சங்கம் சிறப்புறச் செயற்பட்டு வருகிறது. 85ம் ஆண்டில் சுத்த லாபமாக 12,68,651 ரூபா 36 சதத்தைப் பெற்றுள்ளது." [ஐ]

## பொதுச் சபை நாளை கூடுகிறது

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் நாளை இயக்குநர் சபைத் தலைவர் திரு சி. சிவமகாராசா தலைமையில் நடைபெறவுள்ளது. [ச]

## அனுமதியின்றி துப்பாக்கி: கடும் நடவடிக்கை எடுக்கப்படுமாம்

(கொழும்பு)

துப்பாக்கி போன்ற ஆயுதங்களை தடை செய்யப்பட்ட மாவட்டங்களில் வைத்திருத்தல், அனுமதியின்றி இடத்துக்கு இடம் எடுத்துச் செல்லல், கை மாறுதல், அனுமதிப்பத்திரம் இன்றி உடயோகித்தல் ஆகியன தொடர்பாக விதிமுறைகளை மீறுவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கஇருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

1986 ம் ஆண்டுக்கான துப்பாக்கி அனுமதிப் பத்திரங்களை கச்சேரி, உதவிஅரசாங்க அதிபர் அலுவலகங்களில்பெறலாம் என்றும், தடை செய்யப்பட்ட மாவட்டங்களில் இது நடைபெற மாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருத்தவேலை மேற்கொள்ள கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பண்ணைத் தாம்போதி வீதியில் மண்டைதீவுச் சந்தியில் இருந்து அல்லைப்பிட்டி வரையிலான பகுதி உயரம்குறைந்த நிலையில் இருப்பதால் மழைகாலங்களில் வீதியை மேவி கடல்நீர் பாய்கிறது. இதனால் வீதியும் பெரிதாகப் பாதிக்கப்படுவதோடு மக்களும் போக்குவரத்துச் செய்யமுடியாமல் இன்னலடுகின்றனர். எனவே இவ்வீதியை உயர்த்தி திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். புங்குடுதீவு வேலணைத் தாம்போதியின் கரைப்பாகங்கள் கடலலையினாலும் மீனுக்குவெடி போடுவதாலும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதை உடன் செப்பனிட்டு பாரியஅழிவு ஏற்படாது தடுப்பதோடு இவ்வீதியில் பதிந்துபோன இடங்களையும் நிரப்பிச் சீராக்கவேண்டும். அத்தோடு புங்குடுதீவு ஆவரங்காடு, ஊரைதீவு, இருப்பிட்டி வீதியிலுள்ள சப்பாத்துக்கால்வாய்களில் மழை நேரத்தில் நீர்தேங்குவதால் போக்குவரத்தே செய்யமுடியாதநிலை ஏற்படுகிறது. எனவே அக்கால்வாய்களை நிரப்பி ஒரேசீராக வீதியை அமைப்பதோடு கள்ளியாறு, கேரதீவு போன்ற கடல்பகுதிகளில் இவ்வீதி அரித்துச்செல்லப்படாது பாதுகாப்பதற்காக வீதியின் இருமருங்கும் பாரிய கல் அணைகளும் கட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்.''

இவ்வாறு ஊரைதீவு கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் திரு. எஸ். கே மகேந்திரன் யாழ்ப்பாண நெடுஞ்சாலைத் திணைக்கள பிரதம பொறியியலாளரை மகஜர்மூலம் கோரியுள்ளார்.

இதன்பிரதிகள் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கும் வேலணை நிறைவேற்றுப் பொறியியலாளருக்கும் வேலணை உதவி அரசாங்க அதிபருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.




# பாடப் புத்தக விநியோகத் தாமதம்: வடபகுதி மாணவர்கள் பாதிப்பு!

(மானிப்பாய்)

சமீபகாலமாக வடபகுதி பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வரும் பாடப்புத்தகங்கள் தாமதமாக பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படுவதால் மாணவர்களும் ஆசிரியர்களும் பலவித சிரமங்களுக்குள்ளாக வேண்டியிருப்பதோடு கல்வியின் தரத்திலும் குறிப்பிட்டளவு பின்தங்கவேண்டியதொரு நிர்ப்பந்த நிலையிலிருப்பதாக தமிழர் ஆசிரியர் சங்க வடபகுதிப் பிரசாரச் செயலாளர் திரு.ந. சிவதம்பி இது சம்பந்தமாக வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் எடுத்துக் கூறியுள்ளார். அவர் தமது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

''இப்போதைய அமுலிலிருந்து வரும் திட்டப்பிரகாரம் இலவசமாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வரும் புத்தகங்களை வேறு தனியார் புத்தகக் கடைகளில் வாங்க முடியாது. இதனால் சித்திபெற்றுள்ள மாணவன் ஒருவன் டிசம்பர் விடுதலையில் எதையுமே கற்றுக்கொள்ள முடியாத நிலையிலிருக்கிறான். இதனால் சுமார் ஒருமாதகாலம் அந்த மாணவன் வீணே கழிக்கவேண்டி ஏற்படுகிறது.

''ஆரம்ப பாடசாலை மாணவரைப் பொறுத்தவரையில் இது மோசமான பாதிப்பை ஏற்படுத்துகிறது.

''இந்த வருடத்தில் இலவச பாடநூல் விநியோகம் ஐந்தாவது மாதத்தில்தான் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டது. அதிலும் முதலாம் ஐந்தாம் வகுப்புத் தமிழ்ப் புத்தகங்கள் இந்த வருட முடிவுதரை மாணவர்களுக்குக் கிடைக்கவேயில்லை.

''மாணவர்களுக்கு விநியோகிக்கப்படும் புத்தகங்கள் உரியநேரத்தில் கிடைக்காததால் முழுவருடத்துக்குத் தேவைப்படும் முழுநிறைவான கல்வியைப் பெற்றுக்கொள்ள முடியாததொரு நிலையில்வருட இறுதிப் பரீட்சைக்குத்தோற்ற வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள் இதனாலும் அவர்களது கல்வித் தரம் பாதிப்படைகிறது. இவ்வித பாதிப்புகளிலிருந்து மாணவர்களைக் காப்பாற்ற உரிய நேரத்தில் அவர்களுக்கு பாடப்புத்தகங்கள் கிடைக்க ஏற்ற ஒழுங்குகளை வடபகுதிக் கல்வித் திணைக்களம் மேற்கொள்ள வேண்டும்''

## கட்டாக்காலி நாய்கள்

(மானிப்பாய்)

யாழ்ப்பாண நகரவீதிகளிலும் ஒழுங்கைகளிலும் தற்போது கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளதால், பாதசாரிகளும் சைக்கிளில் செல்பவர்களும் மிகவும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றார்கள்.

இரவு நேரங்களில் இத்தொல்லைகள் கூடுவதால் இந்த வீதிகளால் போக்குவரத்துச் செய்பவர்கள் நாய்கடித் தொல்லைகளுக்கும் வீண் சிரமங்களுக்குமுள்ளாகி வருகின்றார்கள்.

## கலாசாரத்தை...

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

வருவது பெருமிதமாக உள்ளது என்றும், நல்ல ஆக்க இலக்கியகர்த்தாக்களும் இங்கு தோன்ற ஆரம்பித்து விட்டது நல்ல அறிகுறியாகும் என்றும் சொன்னார்.

திருவாளர்கள் எஸ். எஸ். அச்சுதன்பிள்ளை, க. செ. வீரசிங்கம், கே. மதிவதனன், எஸ். திருவருள்தேவன், அண்ணுவி கதிரமலை முதலானோரும் உரையாற்றினார்கள்.

வரணியூரான் பதிலுரை வழங்கினார்.

# கச்சேரி திறைசேரி முத்திரை விற்பனை இல்லை

(வவனியா)

வவனியா கச்சேரி திறைசேரியில் முத்திரை விற்பனை நிறுத்தப்பட்டுள்ளது.

திறைசேரியில் இடம் பெற்ற கொள்ளையை அடுத்தே முத்திரை விற்பனை நிறுத்தப்பட்டுள்ளதாக கச்சேரி அதிகாரி ஒருவர் கூறினார்.

இறப்பு, பிறப்பு பத்திரங்களைப் பெற வரும் பொது மக்கள் பத்திரங்களுக்கான முத்திரையைப் பெறமுடியாது அவதிப்படுகின்றனர்.

முத்திரை பெற நகரில் உள்ள தபால் நிலையத்திற்கே மக்கள் படை எடுக்கின்றனர்.

# அகதிமுகாமில் 1,849 பேர்!

[வவனியா]

வேப்பங்குளம் அகதிமுகாமில் தற்போது 464 குடும்பத்தைச் சேர்ந்த 1,849பேர் தங்கியுள்ளனர் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

ஓமந்தை, இயங்கராவூர், பம்பைமடு, செக்கடிப்புலவு, ஆறுமுகத்தான் புதுக்குளம் முகாம்களைச் சேர்ந்தவர்களும் மேற்படி முகாமிற்கே ஒன்றிணைக்கப்பட்டுள்ளாகள் அதிகாரிஒருவர் தெரிவித்தார்.

## இடமாற்றம்

(கிளிநொச்சி)

பேராதனை விவசாயத் திணைக்களத்தில் கணக்காளராகக் கடமையாற்றிய திரு. கா. வீரசிங்கம் கிளிநொச்சி செயலகத்திற்கு கணக்காளராக இடமாற்றம் பெற்றுள்ளார். அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த இவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொருளியல் கணக்கியவில் சிறப்புப் பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ''சுகாதார ஆலோசனைகளைப் பேண மக்கள் முன்வர வேண்டும்''

(கிளிநொச்சி)

''கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னேற்றம் விவசாய அபிவிருத்தியில் தங்கியுள்ள அதே வேளை இப்பகுதி மக்கள் நல்ல மனபலமும் திடபலமும் உள்ளவர்களாக திகழ வேண்டும். அதற்கு திட்டமிடல் பகுதியினர் வழங்கும் சுகாதார ஆலோசனைகளையும் சுகாதார திட்டங்களையும் பேணவும் பின்பற்றவும் முன்வரவேண்டும்''

இவ்வாறு கிளிநொச்சி திட்டமிடல் பகுதியினர் நடத்திய தேசிய பற் சுகாதார விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான திரு.என். ஜெயநாதன் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி கருணைநிலையத்தில் திட்டமிடல் அதிகாரி திருமதி பவானி ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் இவ்விழா சிறப்பாக நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராகத் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் டபிள்யு. யூ. ஸி. செல்வநாயகம் கலந்துகொண்டார்.

அரசாங்க அதிபர் திரு. ஜெயநாதன் மேலும் பேசுகையில், குழந்தைகள்தான் நாட்டின் எதிர்காலச் செல்வங்கள். இவர்களுக்கு கல்வியை மட்டும் நாம் புகட்டினால் போதாது, நல்ல ஆடைகளை அணிவித்தால் மட்டும் போதாது, நல்ல சுகாதார பழக்கவழக்கங்களையும் பழக்க பெற்றோர் முன்வரவேண்டும் என்றார்.

## அகதி முகாமில் ஒளிவிழா

(வவனியா)

வவனியா — வேப்பங்குளம் அகதிமுகாமில் ஒளிவிழா நடைபெற்றது.

இறம்பைக்குளம் பங்குதந்தை அருட்திரு பி. ஜேசுராஜா அடிகள் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தார்.

சிறுவர் சிறுமியர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. நத்தார் பரிசு பொருட்களும் வழங்கப்பட்டது.

## சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சந்தைக்கு சாமான் வாங்க வரும் பொது மக்களின் சைக்கிள்கள் அடிக்கடி திருட்டு போகும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

கடந்த மாதத்தில் மாத்திரம் ஆறு சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளன.

பொதுமக்கள் தங்கள் சைக்கிள்களை தரமான சங்கிலிப் பூட்டு போட்டு பூட்டி விடவேண்டும் என்று ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமைதியான கிறிஸ்மஸ்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு, இளவாலை, மாதகல், சில்லாலை ஆகிய பகுதிகளில் கிறிஸ்மஸ் பண்டிகை கத்தோலிக்க மக்களினால் மிகவும் அமைதியான முறையில் அனுட்டிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள தேவாலயங்களில் விசேட பூசைகளும் ஆராதனைகளும் வழமைபோல நடைபெற்றன.

## காசோலை மூலம் மாதவேதனம்

[வவனியா]

வவனியா தபால் நிலையத்தில் கடமையாற்றும் சகல ஊழியர்களினதும் மாதாந்த வேதனம் காசோலைகள்மூலமே வழங்கப்படுகிறது.

பெருந்தொகை ரொக்கப் பணம் தபால்நிலையத்தில் வைத்திருப்பதற்கு போதியளவு பாதுகாப்பு இல்லை என்பதினாலேயே வேதனம் காசோலைகள் மூலம் வழங்கப்படுவதாக தபால்நிலைய அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## அஞ்சலி செலுத்தி சுவரொட்டிகள்

[வவனியா]

ஓமந்தை, வேப்பங்குளம் பகுதிகளில் அண்மையில் சுட்டுக்கொல்லப்பட்ட றேகனுக்கு 31-வது நாள் அஞ்சலி செலுத்தி மரியாதைக் குண்டுகள் தீர்க்கப்பட்டதுடன் அஞ்சலிஒலிபரப்பும்இடம்பெற்றது ''ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வன்னிப் பிராந்திய மக்கள் விடுதலைப் படை தளபதி றேகன்'' என்று அந்த சிவப்புநிற சுவரொட்டியில் விமர்சிக்கப்பட்டிருந்தது

## இடமாற்றம்

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலையில் பதில் பொறுப்பதிகாரியாக கடமையாற்றும் பதிவு பெற்ற வைத்தியர் டாக்டர் என். கந்தையா ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் யாழ் பிரதேச சுகாதார பணிப்பாளர் அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரின் இடத்திற்கு கடவத்தை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் வி. முத்துக்குமாரசாமி இடமாற்றம் பெற்றுள்ளார்.

# இன்றைய பலன்

மாதம்: மார்கழி
திகதி- 13(1985-12-28)
கிழமை- சனி
திதி- பிரதமை
பி.ப. வரை
நக்ஷத்திரம்- புநர்பூசம்
முழுநாளும்

மேடம்: செலவுக்கு வேண்டிய பணம் இன்றுகிடைக்கும். விருந்துபசாரத்திற்கும் இடமுண்டு. தொழிலிலும் நன்மையுண்டு.

இடபம்: நிதியில் முடக்கம் ஏற்படும். சிலர் வீண் பழிக்கும் இலக்காக நேரும். துணிச்சலுடன் எதிர்நீச்சல் போட்டால் வெற்றியுண்டு.

மிதுனம்: இடர்கள் பல தாக்கும். இதயத்தில் எரிமலை குமுறும். உதவிசெய்யப்போய் உபத்திரவத்தை அணைத்துக் கொள்ள நேரும்.

கடகம்: நீண்டநாள் பிணி நீங்குவதற்கு இடமுண்டு. மனை வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். பேச்சாளர்களுக்கு இன்று சிறப்பான தினம்.

சிங்கம்: ஆசாரக் குறைவிற்கும் அதிக பொருள் விரயத்திற்கும் இடமுண்டு. இன்று அதிக பேச்சைத்தவிர்க்கவும்,

கன்னி: கடந்த கால நினைவுகள் உங்களுக்குக் கவலையைத் தரும். பிறர்மீது அதிக நம்பிக்கையை வைப்பதைத் தவிர்த்துக்கொள்ளவும். தாய்வழிச்சுகமும் உண்டு.

துலாம்: அறவழிகளை மனம் நாடும். கவர்ச்சிகரமான பொருட்களை விரும்புவீர்கள். உங்கள் உதவிக்குப் புத்திரர் விரைவர்.

விருச்சிகம்: கௌரவத்தைப் பாதிக்கக்கூடிய சம்பவம் இடம்பெறலாம். தூற்றலகளை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர். எதிலும் முன்யோசனை விரும்பத்தக்கது.

தனுசு: பகைமையான சம்பவங்கள் நடைபெறும். களஸ்திரவழியால் நன்மைகள் சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை உருவாகும்

மகரம்; நம்பிக்கை மோசடி நடக்கும். நண்பர்களும் காலைவாரிவிடக்கூடும். எச்சரிக்கை வேண்டும்.

கும்பம்: பிறருக்கு உதவுவதில் முன்நிற்பீர்கள். இதன் மூலம் பணமும் செலவாகும். பொதுப் பணியாற்றுபவர்களுக்குச் சிறப்பான தினம்.

மீனம்; செய்தொழில் மூலம் சிறப்புண்டு. பெரியவர்கள் ஆசியுமுண்டு. விளையாட்டு வீரர்கள் முதலிடம் பெறுவர்.

திருமலை
வே. ரவீந்திரன்

## ரூபவாஹினி

மாலை:
5-00 செய்திகள்
5-05 கார்ட்டூன்
5-10 உடலை அறிந்து கொள்ளுங்கள்
5-30 உலக விளையாட்டு நிகழ்ச்சி
6-30 செய்திகள் (தமிழ்)
7-00 'பிளனட் ஒப்க ஏப்ஸ்'
8-00 செய்திகள் (சிங்களம்)
8-.5 தொலைக்காட்சி நாடகம்
9-00 செய்திகள் (ஆங்கிலம்)
9-25 'வியூவர்ஸ் கியூரிஸ்'
9-50 மிக் கிளயின்ஸ் லே" (விறு விறுப்பூட்டும் நவீனம்]
10-40 ஒளிபரப்பு முடிவு

## நிரந்தர நியமனம்

[வவனியா]

வவனியா நகர சபையில் தற்காலிக ஊழியராக நாளாந்த அடிப்படையில் பணியாற்றிய 10 ஊழியர்கள் புத்தாண்டு வருடத்துடன் நிரந்தர ஊழியர் ஆக்கப்படவுள்ளனர்.

## பாடசாலை மாறும் மாணவர் பாதிப்பு

[மானிப்பாய்]

மூன்றும் தவணை முடிந்தும் பாடசாலை விடுகைப் பத்திரங்கள் இன்னமும் வடபகுதிப் பாடசாலைகளுக்கு கல்வித் திணைக்களத்தால் விநியோகிக்கப்படாததால் வேறுபாடசாலை செல்லவிரும்பும் மாணவர்களுக்கு இவற்றை வழங்குவதில் அதிபர்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகிறார்கள்.

## அஞ்சலி

[வவனியா]

வவனியா முகாமில் வைத்து படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழ இராணுவ பிரிவினைச்சேர்ந்த அரவிந்தன், டன்னீர்ச்செல்வம் ஆகிய இருவருக்கும் அஞ்சலி செலுத்தி சுவரொட்டிகள் காணப்படுகின்றன.

முதலாவது ஆண்டு நினைவு அஞ்சலி இது என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.

## முஸ்லிம் இளைஞன் மரணம்

[வவனியா]

ஊர்காவல் படையினர் சுட்டதில் படுகாயமடைந்து அநுராதபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட செட்டிகுளத்தைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞன் மரணமானார்.

நேரியகுளத்தில் இச்சம்பவம் நடைபெற்றது.

இச் சம்பவத்தில் இரு வாலிபர்கள் காயமடைந்தது தெரிந்ததே.

இறந்தவரின் பெயர் பீர்சாகிபு என்று தெரியவந்தது

## நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். முஸ்லிம் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் உத்தியோகத்தர் தெரிவும் நடைபெற்றபோது பின்வருவோர்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் எம்.எம். இஸ்ஸதீன் ஜே.பி செயலாளர் எம். மன்சூர், பொருளாளர் ஏ. எம் ஜலீல், உபதலைவர் ஐ சாகுல் கமீது, உபசெயலாளர் ஏ.ஏ.எம். நவாஸ். செயற்குழு உறுப்பினர்களாக ஏ.எம் நஜீப், எம்.எம். அமீர், ஏ.ஏ எம். நஸீர், ஏ. லாபிர், ரீ. குவைஸ், எம். முனாஸ், எஸ். எம். ஜமால்தீன் ஆகியோரும் தெரிவானார்கள்.

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# கிளிநொச்சி புதிய சந்தை ஜன. 1ல் திறக்கப்படும்

## செய்தியாளர் மகாநாட்டில் அரச அதிபர் பல தகவல்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் நிலையத் தாக்குதலைத் தொடர்ந்து அமுலுக்கு வந்த தடைசெய்யப்பட்ட பகுதிக்குள் சேதமாக்கப்பட்ட பஸ்நிலைய முன்பாக அமைந்துள்ள பிள்ளையார் ஆலயம், விற்பனைத் திணைக்களம், கரைச்சிதெற்கு ப.நோ.கூ. சங்க விற்பனை நிலையம் முதலியவற்றை மீண்டும் இயக்குவதற்கு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்டச் செயலாளருமான திரு.என். ஜெயநாதன் நடவடிக்கை எடுத்துள்ளதாக பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் நேற்று தெரிவித்தார்.

அரசாங்க அதிபர் திரு. ஜெயநாதன் தொடர்ந்து மேலும் தெரிவித்திருப்பதாவது:

''இணைப்பதிகாரி மேஜர் கொப்பேகடுவவுடன் தாம் தொடர்பு கொண்டதன் பேரிலேயே தடைசெய்யப்பட்ட பகுதிக்குள் அமைந்துள்ள இவற்றை மீண்டும் இயக்குவதற்கு அனுமதிகிடைத்துள்ளது.

''கிளிநொச்சியின் புதிய பொதுச்சந்தையை எதிர்வரும் 1ம் திகதி திறக்க நான் நடவடிக்கை எடுத்துள்ளேன். இச் சந்தைக்கு செல்லும் புதிய வீதிக்கு மின்சாரவசதி ஏற்படுத்திக் கொடுக்க 2 லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளேன்.

''நான் வெளிநாடு சென்ற காலத்தில் அகதிகளுக்கு கொடுக்கப்படாதிருந்த உணவுப் பொருட்களை வழங்க அரசுடன் தொடர்புகொண்டு அனுமதி பெற்றுள்ளேன். பொதுமக்கள் நன்மை கருதி இலங்கை வங்கியின் சேவைகளை துரிதப்படுத்தும் முகமாக இராணுவ முகாமிற்கு அருகில் இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இன்னும் ஒரு மாதத்தில் முன்னர்போல் பொதுமக்கள் வங்கி நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடியதாக இருக்கும்.

''கிளிநொச்சிமாவட்ட ஆஸ்பத்திரியின்முன்னேற்றம் கருதி ஆஸ்பத்திரி அபிவிருத்தி சபையால் புதிதாக சட்டப்பட்டு வரும் 'எக்ஸ்றே கட்டிட விஸ்தரிப்பை நோக்கமாகக் கொண்டு ஒருலட்சத்து 25ஆயிரம்அளவில் ஒதுக்கீடு செய்யவுள்ளேன். மலகூடங்கள் அமைக்க 50 ஆயிரம் ரூபா ஒதுக்கவுள்ளேன்''

# ''நாடற்றவர் என்ற நிலை இருக்கும்வரை இனப் பிரச்னைக்கு தீர்வு இல்லை''

(யாழ்ப்பாணம்)

மலையகமக்களின் கட்டாய நாடுகடத்தலை ஏற்றுக்கொள்ள ராஜதந்திர ரீதியில் இந்தியா மறுத்துள்ள அதே சமயம் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், மலையகத்தில் உழைக்கும் மக்களை இந்திய வம்சாவழியினர் என்றும் இந்தியப் பிரஜைகள் என்றும் அவர்களை இந்தியா ஏற்றுக்கொள்ளும் ஆனால் அதற்கு முன்னர் இனப்பிரச்னைக்குத் தீர்வு காணவேண்டும் என்றும் கூறுவது மிகவும் கவலை அளிப்பதாக உள்ளது.''

இவ்வாறு 'ஈழப்புரட்சி அமைப்பு' (ஈரோஸ்) விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:-

மலையக மக்களை நாடுகடத்துவதற்காக, முன்னர்செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் காலாவதியாகிப்போய்விட்டன. இவ் ஒப்பந்தங்களின் பிரகாரம் 81ற்கு முன்னர் இந்தியாவிற்கு இன்னமும் 84,000பேர் வரையில் அனுப்பப்படவுள்ளனர். இந்த மக்களை இந்தியா ஏற்றுக் கொண்டால் இங்கு வாழும் நாலரைலட்சம்பேருக்கு குடியுரிமை வழங்கப்படுமென இலங்கைவிதித்தநிபந்தனையை இந்தியா மறுத்துள்ளமை பெரும் வரவேற்புக்குரியதாகும். இதற்காக இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ் காந்தி பாராட்டுக்குரியவராகிறார்.

''இதே வேளை காடு மேடாய் கிடந்த மலையகத்தை திருத்தி - வளங்கொழிக்கும் பூமியாக மலரச்செய்த இந்த மக்கள் இந்த மண்ணிலேயே தொடர்ந்தும் வாழவிரும்புகின்றனர் என்பதை பல தடவைகளில் வெளிப்படுத்தியுள்ளனர். என்பது கவனிக்கத்தக்கது. குறிப்பாக 64ல் சிறிமா - சாஸ்த்திரி ஒப்பந்தம் கைசாத்திடப்பட்ட பின்னர் இந்த மக்கள் மத்தியில் விண்ணப்பங்கள் மூலம் அபிப்பிராயம் கேட்டபோது சுமார் 8 லட்சத்திற்கும் அதிகமானோர் இலங்கைக்குடியுரிமைக்கு விண்ணப்பித்தமையினை நினைவு கூருதல் பொருத்தமானதாகும். ஆனால் மலையகத்தை பிறப்பிடமாக வாழ்விடமாக கொண்ட இந்த மக்களின் விருப்பத்துக்கு மாறாக சுமார் 4 லட்சம் பேர் வரையில் பலவந்தமாகவும் - அச்சுறுத்தல்களுக்கூடாகவும் நாட்டை விட்டு விரட்டப்பட்டுள்ளனர்.

இதனாலேயே அண்மையில் நாடற்றவராக்கப்பட்ட தேசிய துக்கதினத்தை நினைவு கூர்ந்த ஈரோஸ் அமைப்பினராகிய நாம், மலையகத்து மக்களால் வளப்படுத்தப்பட்ட அந்த மண்ணை அவர்களது உடமையாக மாற்றும் போராட்டத்திற்கு அறைகூவல் விடுத்ததோடு - தொடர்ந்தும் இவர்கள் நாடு கடத்தப்படுவதை அனுமதிக்காதிருக்கும் படி இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியை வலியுறுத்திக் கேட்டிருந்தோம்.

''நாடற்றவர் என ஒரு சாரார் இருக்கும் வரையில் இனப்பிரச்னைக்குத் தீர்வு என்பது என்றும்மில்லை என்பதை அழுத்திக் கூறுவதோடு, தமிழ் பேசும மக்கள் எவரும் எந்த வகையிலும் எந்தச் சூழ்நிலையிலும் நாடுகடத்தப்படுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது என்பதை திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

# யாழ். மாநகரசபை வரவு-செலவுத்திட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மநகரசபையின் 1986ம் ஆண்டு வரவு — செலவுத்திட்டத்தில் 55,420 ரூபா மேலதிகமாகும்.

மொத்த வருமானம் 6,31,92,960 ரூபாவாகும். மொத்த செலவினம்7,77,430, 40 ரூபாவாகும். 1985ம் வருடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்படாத தொகை 1,46,05,500 ரூபாவாகும்.

நல்லூர் இந்து விடுதியில் யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடந்த கூட்டத்தில் 86ம் ஆண்டு வரவு செலவு திட்டம் நிறைவேறியது. நேற்றுக்காலை 10 மணிக்கு ஆரம்பமான கூட்டம் மாலை 6 மணிக்கு முடிவடைந்தது.

# இருவர் கைது

(வவனியா)

வவனியாவில் கராஜ் ஒன்றில் 'வெல்டிங்' வேலை செய்து கொண்டிருந்த இளைஞர் ஒருவர் நேற்று ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்டார்.

பாலு சேகர் என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

அதே கராஜ்ஜில் வேலை செய்த இளைஞர்முன்னர் கைது செய்யப்பட்டிருந்தார். வானொன்றில் அந்த இளைஞருடன் வந்த ஆயுதப்படையினரே இந்த இளைஞரையும் கைது செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நண்பகல் 'செவன' டிக்கற் விற்பனை செய்து கொண்டிருந்த இளைஞனையும் ஆயுதப் படையினர் கைதுசெய்துள்ளனர். (மா)

# சிறப்பாக நடந்தேறிய...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

களைக்கௌரவிக்கும் வைபவம். நாதஸ்வர வித்துவான் திரு. கணேசன், தவில்வித்துவான் திரு. வீராசாமி இவர்களின் தந்தை முதுபெரும் நாதஸ்வரக் கலைஞர் ஆகியோர் இணுவில் தவில்மேதை என். ஆர். ஆர். சின்னராசாவினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

அகில இலங்கைக் கம்பன் கழகழகத்தின் அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜின் சிறப்புச் சொற்பொழிவும் இடம் பெற்றது. [நா]

# இன்று பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் 6ம் தரத்தில் அனுமதி பெறும் மாணவர்களுக்கான அனுமதிப் பரீட்சை, இன்று சனிக்கிழமை காலை ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நேரசூசிப்படி நடைபெறுமென கல்லூரி அதிபர் திரு. எஸ். வி. மஹேசவேலு அறிவித்துள்ளார். (ச)

# விவசாயிகள் கைகலப்பு

## ஒருவர் கை துண்டிப்பு

(வவனியா)

வவனியாப் பகுதியிலுள்ள மடுக்கந்தையில் இரு சிங்கள விவசாயிகளுக்கிடையே ஏற்பட்ட மோதலில் ஒரு விவசாயியின் கை துண்டிக்கப்பட்டுள்ளது.

மகிந்த 27 வயது என்பவர் கைதுண்டிக்கப்பட்ட நிலையில் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினமிரவு இச்சம்பவம் இடம்பெற்றது. (மா)



# மரண அறிவித்தல்

## டாக்டர் அ. விஜயரத்தினம்

அராலி வடக்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த டாக்டர் அ.விஜயரத்தினம் காலமானார் இவர் சங்கீத ஆசிரியை சிவகாமசுந்தரியின் அன்புக் கணவரும், ஆனந்தி, விஜயானந்தன், நாவுக்கரசி ஆகியோரின் தந்தையும், ஓய்வுபெற்ற விரிவுரையாளர் அரியரத்தினம், நாகம்மா, கனகம்மா, நேசம்மாவின் சகோதரரும், காலஞ்சென்ற சங்கீதபூஷணம் தில்லையம்பலத்தின் மருமகனும், காலம் சென்ற சிவக்கொழுந்து, சபாபதிப்பிள்ளையினது,ம் அமிர்தலிங்கம், செல்லத்துரை ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியை 28-12-85 இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அராலி வழுக்கியாற்று மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். (2664)

# மரண அறிவித்தல்

## தம்பையா சிவசம்பு

பண்டத்தரிப்பு, செட்டிகுறிச்சியைச் சேர்ந்தவரும், முன்னாள் யாழ்ப்பாண சுகாதார போசனசாலை உரிமையாளருமான தம்பையா சிவசம்பு 26-12-85ல் காலமானார். அன்னார் பொன்னுப்பிள்ளையின் அன்புக் கணவரும், தங்கம்மா, பொன்னம்பலம் (சிங்கப்பூர்) ஆகியோரின் அருமைச்சகோதரரும், சிவக்கொழுந்து, மகாதேவன், சரஸ்வதி, பகவதி, சோதிப்பிள்ளை, யோகேந்தினி ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற வரதராசா, நாகராசா, முருகையா, செல்லப்பா, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மாமனுருமாவார். அன்னரது ஈமக்கிரியைகள் 29-12-85 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு சம்பில்துறை மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மனைவி, மக்கள், மருமக்கள்.

செட்டிகுறிச்சி,
பண்டத்தரிப்பு. (2668)

# மரண அறிவித்தல்

## முத்தையா மார்க்கண்டு

(முகாமையாளர், கொக்குவில் மேற்கு ஸ்ரீ வராகி அம்பாள் தேவஸ்தானம்)



**தோற்றம்:** 24-9-1917

**இறைவனடி:** 27-12-1985

இவர் காலஞ்சென்ற சுப்பர் முத்தையாவின் ஏக புதல்வனும், செல்லமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி இராசமணி நடராசாவின் அன்புச் சகோதரனும், இந்திராணி, பரமேஸ்வரன் (பொறியியலாளர்) தவமணிராணி, கலாராணி ஆகியோரது பிரிய தந்தையும், நல்லையா (சிலோன் புருவரி லிமிட்டட், முன்னாள் வனபரிபாலன இலாகா) வசந்தகுமாரி காலஞ்சென்ற தவராசா ஆகியோரது மாமனும், திருமதி டில்க்குஷா விக்னேஸ்வரராசா, (திரு. விக்னேஸ்வரராசா, பொறியியலாளர், நீர்ப்பாசன இலாகா கிளிநொச்சிக்குடி) இந்துஷா (ஆர்த்தி குரூப் யாழ்ப்பாணம்) ஸ்ரீஉஷா, (வேம்படி மகளிர் கல்லூரி) நிருஷா, தவநிருஷன், அனுஷா கோபிநாத் ஆகியோரது அன்புப்பேரனுருமாவார். சமயக்கிரியைகள் 28-12-85 சனிக்கிழமை காலை 10-00 மணியளவில் ''வெண்மதி'' ஆனைக்கோட்டை இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெறும். உறவினர்களும் அன்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

''வெண்மதி''
ஆனைக்கோட்டை. [2649]

சு. நல்லையா
மா. பரமேஸ்வரன்



இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram, Eelanadu, Telephone: 22389-24126